நம்நாடு

ஆசிரியர்

மு. கருணாநிதி

தி.மு.க. வார ஏடு

"NAMNADU" Official Organ of the D. M. K.

மலர் 2— திருவள்ளுவர் ஆண்டு பங்குனி 4 —இதழ் 26

18—3—1979



விலை

50

சரண்சிங் வழங்கும் சலுகையால் யாருக்கு நன்மை?

எல்.கணேசன்

அரசின் நிதிநிலை அறிக்கை என்பது கிராமக் கணக்குப்பிள்ளையின் ஜமாபந்திக் கணக்கு அல்ல; பெட்டிக் கடைக்காரரின் வரவு செலவுப் பட்டியல் அல்ல; அது அரசின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களின் பிரகடனம்; சமூக நல வளர்ச்சிப் பணிகளின் அறிவிப்பு. அரசின் பொருளாதார சமூக நலக் கொள்கை வெளியீடு. இந்தப் பின்னணியில் உழவர்களின் தலைவர் என்று வர்ணிககப்படுகிற துணைப் பிரதமர் சரண்சிங் அளித்துள்ள நிதிநிலை அறிக்கையை ஆய்வு செய்வது நமது கடமை.

பொருளாதாரத் துறையில் புதிய சிந்தனையும் புதிய பார்வையும் உடையவர் சரண்சிங்; எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணியர் என்றெல்லாம் பெரிதும் நம்பப்பட்டவர். எனவே அவரின் நிதி அறிக்கை இந்தியப் பொருளாதாரத்தின் நீண்டகால நோய் தீர்க்கும் மாமருந்தாக அமையும்; முடங்கிக் கிடக்கும் பொருளாதாரத்தை விரைந்து நடைபோடச் செய்யும் புதிய திட்டங்களைக் கொண்டதாக இருக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், நமக்கு ஏற்பட்டிருப்பதோ ஏமாற்றம் — பெரும் ஏமாற்றம்; அது பழைய பாதையில், பழைய இலக்கை நோக்கி பழைய வேகத்திலேயே நத்தைபோல் வளர்ந்து செல்கிறது முந்திய நிதிநிலை அறிக்கைகளைப்போலவே கொடிய வரி விதிப்புகள். அவ்வரி விதிப்புகளுக்குப் பின்னரும் தூர்க்க முடியாத பற்றுக்குறைப்பாதாளப்பெரும்பள்ளம் கொண்டதாக இருக்கிறது. ரூ. 1975 கோடி மொத்தப் பற்றுக்குறை. ரூ 666 கோடி புதிய வரி விதிப்பு. அதுபோக எஞ்சி நிற்கும பற்றுக்குறை ரூ. 1300 கோடிக்கும் அதிகம்.

அரசு நாசிக்கில் உள்ள அச்சகத்தை தனது கரத்திலே இருக்கும் அலாவுதீன் அற்புத விளக்காகக் கருதுகிறது. பற்றுக்குறையைச்சரிக்கட்ட நோட்டடிப்பது தவிர வேறு வழி இல்லை. வெறும் நோட்டடிப் [illegible] பாதிக்கப்படுபவர்கள் ஏழைகளும் நடுத்தர வர்க்கத்தினருமே. பற்றாக்குறையால் வெறும் நோட்டடிக்கும் ஒரு அரசிற்கும் கள்ள நோட்டு அடிக்கும் சமூக விரோதிக்கும் வேறுபாடு அதிகம் கிடையாது.

மொத்த வியாபார விலை உயர்வு ஒரு சதவிகிதம். ஆனால் நுகர்வோர் விலைஉயர்வோ நாலரை சதவீதம் இதற்கு என்ன பொருள்? செல்வந்தர்களால ஏழைகள்கசக்கிப் பிழியப்படுகிறார்கள் என்பதுதானே பண்டங்களின் மீதான பொது 'எக்சைஸ்' வரி 5 சதவீதம் உயர்த்தப்பட்டிருப்பதும், பெரும் பற்றுக்குறை நிலவுவதும் விலையை ஏற்றும் ஏழைகளின் வாங்கும் சக்தியைக் குறைக்கும், ஏழைகள் நுகர்வைக் குறைக்கும் பணக்காரர்களைமேலும் பணக்காரர்களாவும் ஏழைகளை ஏழைகளாவும் ஆக்கும்.

வருவாய் பெருகியிருப்பது மட்டுமே ஓர் அரசை நல்லரசாகக் காட்டிவிட முடியாது. எந்த எந்த இனங்களின் மூலம் வருவாய்உயர்ந்திருக்கிறது என்பதே முக்கியம். 1979 - 80-ல் மொத்த வரிவிதிப்பு ரூ 11 486.42 கோடி. இதில் மறைமுக வரி மூலம் — பண்டங்கள் பணிகள் மீது ஏழைகள் செலுத்தும் வரி மூலம் மட்டும் கிடைப்பதோ ரூ 8 431 67 கோடி. செல்வர்கள் செலுத்தும் வருமான வரி மூலம் கிடைப்பதோ ரூ. 1252 கோடி தான்.

ஏழைகளையும் மத்திய தரவர்க்கத்தினரையும் பாதிக்கும் வரிகளை தாராளமாக விதித்திருக்கிறார் சரண்சிங் மண்ணெண்ணெய் சோப்பு பீடி. சுருட்டு. டீசல். பெட்ரோல் இவைகளின் மீது வரி அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் விளைவு இன்று மண்ணெண்ணெய் கிடைக்காது ஏழைகள் அவதிப்படுகிறார்கள்.

உணவுப் பண்டங்கள். பானங்கள் மூலம் கிடைக்கிற வரி (இதில் சர்க்கரை மூலம் மட்டும் ரூ. 132 கோடி) ரூ. 252.73 கோடி.

சிகரெட், சுருட்டு உட்பட புகையிலை மூலம்வரும்வரி ரூ. 316 53 கோடி

மண்ணெண்ணெய் மூலம்வரும் வரி மட்டும் ரூ. 159 60 கோடி

இவை எல்லாம் எதைக் காட்டுகின்றன? அரசின் வரியால் ஏழைகளும் நடுத்தர வர்க்கத்தினரும் தானே சகக்கிப் பிழியப்படுகிறார்கள்!

வரிகள் மூலம் வருவாய் கிடைக்கட்டும். அந்த வருவாய் எப்படிச் செலவழிக்கப்படுகிறது? இராணுவம். காவல்துறை உள்ளிட்ட அரசு இயந்திர நிர்வாகச் செலவு மட்டும் ஏறத்தாழ ரூ 8000 கோடி.

படைக்குக் குதிரை வாங்க வேண்டிய பணத்தில் கோயில்கட்டுவது பக்தியுமாகாது; நாட்டைப் பரிபாலிப்பதுமாகாது. ஏழைகளின் குருதியைப் பிழிந்து பணக்காரனுக்குப் பருகிட பானமாகத் தருவது அரசின் அடையாளமாகிவிடாது

சரண்சிங் நிதிநிலை அறிக்கையில் பாராட்டிற்குரிய ஒன்று இரசாயன உரங்களின் மீதான எக்சைஸ்' வரி குறைக்கப்பட்டிருப்பதும் இது போன்ற விவசாயத்துறைக்களிக்கப்பட்டிருக்கும் வேறு சில சலுகைகளுமே இந்தச் சலுகைகள் கூட கேரளம், தமிழகம் போன்ற மாநிலங்களில் மட்டுமே சிறிய நடுத்தர விவசாயிகளுக்குப் பயன்படும். குட்டி நிலப்பிரபுக்கள் ஒழிக்கப்படாத பெரும்பான்மை மாநிலங்களில் இச்சலுகைகள் நிலப் பிரபுக்களையே கொழுக்கச் செய்யும்.

★★

ஒரு கேள்வி - பதில்!

பத்திரிகையாளர்: இந்திரா காந்தியை இன்னும் நீங்கள் புரிந்து கொள்ளவில்லை என்று சொல்கிறீர்களா?

சுவரன்சிங்: என்னை நானே இன்னும் புரிந்துகொள்ளவில்லை...

'பேட்ரியாட்'

ஆளும் கட்சியின் அராஜகம்

'The law maker should not be the law breaker' என்று ஆங்கிலத்தில் மணி மொழி உண்டு. மொழிகளின் மூத்த மொழியாம் தாய்த் தமிழின் நிலத்திலிருந்து போன பழமொழிதான் அது. வேலியே பயிரை மேய்ந்தால் என்னவாகும்? அதுதான் -சட்டத்தை உருவாக்குகிறவன் சட்டத்தை உடைப்போனாகை இருக்கக் கூடாது' என்ற வாசகமாக உருவெடுத்தது.

ஜனநாயகத்தின் பெயரால் ஆட்சி பீடங்களைப் பெற்றுக் கொண்டோர் சட்டத்தின் சன்னிதானத்தில் நியாயத்திற்கு நேர்மைக்கு மரியாதை கொடுத்தாக வேண்டும். 'உபதேசிகள்' தாங்கள் உதிர்க்கிற உபதேசங்களை நடைமுறையில் காட்ட வேண்டும்.

தமிழகத்தை ஆளுகின்ற பொறுப்பினைப் பெற்றிருக்கிற எம். ஜி. ஆர். தனது முதலமைச்சர் பொறுப்பின் தரத்தை உணர்ந்ததாகத் தெரியவில்லை. இந்த 'பட்ஜெட்' கூட்டத் தொடருக்குள்

வில்லிநாடன்

எல்லா எதிர்க்கட்சிகளும் இந்த ஆட்சிக்கு எதிராக நியாயத்தைப் பெறுவதில் போராட்ட உணர்வுகளைக் கூருக்கிக் கொள்வது நிச்சயம்.

காரணம்—நிலைமைகள் கட்டுக் கடங்காத காட்டாற்று வெள்ளம் போல் பெருக்கெடுத்துவிட்டன.

ஆளுங்கட்சியின் அடித்தளத் தொண்டர்கள் குண்டர்களாக தம் வழி காட்டுகிற தளபதிகள் முன்

★

116-வது வட்டச் செயலாளர் எஸ். கே. சாமியின் கடையில் இருந்த சைக்கிள் கடையை அ. தி. மு. க. குண்டர்கள் தீவைத்துக் கொளுத்தி நாசமாக்கினர்.

★

டாசு கட்டி முடுக்கி விடுபவர்களாகவும் தலைமையாளர்கள் மௌடகத்தை அவிழ்த்து விடுகிற மௌன சாமியார்களாகவும் சுய உருவங்களைப் பட்டவர்த்தனமாகக் காட்டத் தொடங்கி விட்டார்கள்,

உலக சட்ட நிபுணர்களையெல்லாம் மீறி முதல்வர் சட்டங்களைப் பற்றிய புதிய விரிவுரைகளைத் தரத் தொடங்கி, இருபத்து நான்கு மணி நேரமும் சட்டச் சவுக்கினை எப்படிப் பிடித்து விளாசுவது என்ற சிந்தனையிலேயே இருக்கிறார்.

நடப்பது என்ன?

எதிர்க் கட்சித் தலைவர்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பில்லை; தொண்டர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கப்படுகிறார்கள். காவல் துறை தன் கண்களை சிறுக மூடிக் கொண்டது! பல இடங்களில் கைத்தடிகளை ஓங்கிச் சுழற்றி எதிர் கட்சித் தோழர்களைப் பதம் பார்க்கிறது.



தென்னாற்காடு மாவட்டச் செயலாளர், சட்ட மன்ற உறுப்பினர் செஞ்சி இராமச்சந்திரன் ஆளுங்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர், அமைப்பாளர். குண்டர்களால் கார் மோதி தாக்கல் பட்டு, அந்தச் செய்தி தமிழக மெங்கும் காட்டுத் தீயினை உருவாக்கி யுள்ளது. அராஜகம் தொடர்கதையாகிறது. தென்னாற்காடு மாவட்டத்தில் தலைவிரித்தாடும் அராஜகம் மக்கள் மத்தியில் புயலைக் கிளப்பியுள்ளது. செஞ்சி இராமச்சந்திரன் எலும்பு முறிந்து. இரத்த காயங்களுடன் மருத்துவமனையில் போராடிக்கொண்டிருக்கிறார்.

சென்னை நகரில் ஆளுங்கட்சிக் குண்டர்கள் சாராயக் குதிரையேறி தி. மு. கழகத் தோழர்களின் வீடுகளுக்குள் நுழைந்து இரவு நேரங்களில் காட்டுத்தனமாகத் தாக்கத் தொடங்கியுள்ளனர். மேற்கு மாமபலப் பகுதி மயான பூமியாகக் காட்சியளிக்கிறது. • இளந்தென்றல் நெளஞ்செழியன் மன்ற செயலாளர் சீனன் உடலின் பல இடங்களில் கத்தியால் குத்தப்பட்டார். கோவிந்தசாமி நினைவு மன்றத் தலைவர் தோழர் காசியின் மண்டையைப் பிளந்துள்ளனர். 116 வது வட்ட செயலாளர் எஸ். கே. சாமியின் கடையைப் பெட்ரோல் ஊற்

(தொடர்ச்சி 16 ஆம்பக்கம்)



★

சைக்கிள் கடைக்குள் இருந்தஎல்லா பொருளும் தீயில் கருகி நாசமாகின.

★

வரவேற்கிறோம்!

சோவியத் நாட்டின் தலைமை அமைச்சர் அலெக்சி கோசிஜன் ஆறு நாட்கள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு இந்திய நாட்டிற்கு வருகை தந்திருக்கிறார் இதனை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வருகையாகவே உலகம் கருதுகிறது. உலகின் கிழக்குப்பகுதியில் ஆதிக்க மனப்பான்மை கொண்ட சீன நாடு வியட்நாம் மீது போர் தொடுத்து ஓய்ந்துள்ள நேரம். ஆசியாவின் மேற்குப்பகுதியில் அரசியல் புயல் வீசிக்கொண்டிருக்கிறது

இந்தக் கால கட்டத்தில் தான் இந்திய சோவியத் சமாதான உடன்படிக்கை நட்புறவு ஒத்துழைப்பு ஆகியவை உறுதி செய்யப்படுகின்றன!

கோசிஜின் அவர்கள் நமது நாட்டின் ஆளுவோருக்கும், பாமர மக்களுக்கும் நன்கு அறிமுகமானவராகி விட்டார். கடந்த பல்லாண்டு



அலெக்சி கோசிஜின் மேற்கண்ட ராஜதந்திர மிக்க நடவடிக்கையை உலகமே கண்டு வியந்தது.

அண்டை நாடான ஈரானில் முடியாட்சிஒழிக்கப்பட்டுஇஸ்லாம் குடியரசுக்குக் கால்கோள் நடைபெறுகின்ற காலம். அமெரிக்க நாட்டின் செல்வாக்கு அந்தமண்ணிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட சமயம்.

இந்தியாவிற்கும் சோவியத்திற்கும் இருந்து வந்த சிக்கலான நாணய மாற்று பிரச்சினையை, எரிச்சல் ஊட்டி வந்த பிரச்சினையை சுமூகமாக முடித்துவிட்ட நிலையில்—இரு நாடுகளுக்கிடையில் உள்ள அரசியல், பொருளாதாரம் இன்ன பிற பிரச்சினைகள் முடிந்துவிட்ட நிலையில் சோவியத் பிரதமர் அலெக்சி கோசிஜின் பெருமையோடும், பூரிப்போடும், எந்த வகையிலும் ஒப்புவமையில்லாத 17 ஆண்டுக்கால பொருளாதார உடன்படிக்கையில் பிரதமர் மொரார்ஜியோடு கையெழுத்திட இருக்கிறார்.

வாழ்த்துகிறோம்!

களாக இந்திய சோவியத் நட்புறவு பலப்பட்டே வந்து கொண்டிருக்கிறது.

அமெரிக்காவோடும், சீனாவோடும் நமக்கு இருக்கின்ற உறவை விட சோவியத் நாட்டோடு நமக்கு ஏற்பட்டுள்ள உறவு நாளும் உறுதிப்பட்டே வந்துள்ளது.

தெற்கு ஆசியாவில் இந்தியாவிற்கு இருந்து வருகின்ற உயர்ந்த நிலைக்கு சீனாவினாலும், பாகிஸ்தானாலும் சோதனை வந்தபோதெல்லாம் சோவியத் நாடு துணைநின்ற சம்பவங்கள் வரலாற்று ஏடுகளில் பளிச்சிட்டுக் கொண்டிருக்கின்றன.

1971—ஆம் ஆண்டு ஏற்பட்ட சமாதான உடன்படிக்கை நின்று நிலைத்தே வருகிறது. செங்கோட்டையில் ஆளுவோர் மாறினாலும் சோவியத்நாட்டோடு நமக்குஇருக்கின்ற உறவு மாறவில்லை.

'பங்களாதேஷ்' பிறந்தபோது அதிர்ச்சி அலைகள் உலகெங்கும் மோதின. அப்போது இந்தியாவை எதிர்த்து அமெரிக்காவும், சீனமும் தலையிட்டு இருந்திருக்கும். ஆனால் வலிவுமிக்க சோவியத் நாடு இந்திய நாட்டின் பக்கம் இருந்ததால் தலையீடு செய்வதில் அவற்றிற்கு துணிவு பிறக்கவில்லை.

1965—ஆம் ஆண்டு இறுதியில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் நடந்த போருக்குப் பின்னர் ஒரு மாநாடு நடைபெற்றது

சோவியத் — உஸ்பெக் குடியரசின் தலைநகரான தாஷ்கண்டில் நடைபெற்ற மாநாட்டில இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் சமாதான உடன்படிக்கை [illegible]

இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கு நட்பு நாடான சோவியத்—தலைவர் கோசிகன் வருகையும், நடத்தி வருகின்ற, பேச்சு வார்த்தைகளும். உடன் படிக்கையில் போடும் கையெழுத்தும் நமக்குப் பெருமையைச் சேர்க்கட்டும்!

நெசவு ஆலைப் பொறியாளராக இருந்தவரும் சோவியத் நாட்டின் அக்டோபர் புரட்சியில் வீரப்போர் புரிந்தவரும் கடந்த பதினைந்து ஆண்டு காலமாக சோவியத் நாட்டின் பிரதமராக தொடர்ந்து விளங்கி வருபவருமான கோசிஜின் அவர்களை வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம்.

—"லெனின்

முந்நூறு ரூபாய்



கலைஞர் கருணாநிதி

"அம்மாவுக்குக் கண் தெரியாது; அப்பா நடமாட முடியாதவர் ஒரு வருடமாகப் பக்கவாதம் — அக்காள் ஒருத்தி விதவை. ஒரு குழந்தையை விட்டு விட்டுச் செத்து விட்டாள். குடும்பத்தைத் தாங்கும் தூண் நான். வெற்றிலை பாக்குக் கடையொன்றில் பத்து ரூபாய் சம்பளத்தில் வேலை; அதுவும்போய்விட்டது. வேலையிலிருந்தபோதே வீட்டில் இரண்டுவேளை பட்டினி. இப்போது கேட்க வேண்டுமா? நீங்கள் எதாவது வழி செய்யுங்கள்; இல்லாவிட்டால் ஒரு முழக் கயிறுதான் செலவு."

—என்று கூறிக் கண்ணீர் வடித்தான் அந்த ஏழை வாலிபன். பெயர் மாத்திரம் லட்சுமி நாராயணன். ஆனல் தரித்திர நாராயணனுய்த் துடித்தான்.

அவன் வேலை கேட்டது இடமோ — பெரிய ஆபீஸ் அல்ல; அல்லது மில் முதலாளியிடமுமல்ல; மாதம் நூற்றைம்பது ரூபாய் வருமானமுள்ள ஒரு பள்ளிக்கூட ஆசிரியரிடம்.

தங்கப்பன், உயர்நிலைப் பள்ளியின் கணித ஆசிரியர். நூற்றைம்பதைக் கொண்டு தன் பெரிய குடும்பத்தையே நடத்தக் கஷ்டப்படும்போது லட்சுமி நாராயணனைக் காப்பாற்ற எப்படித் துணிய முடியும்? தங்கப்பன் இளகிய மனமுடையவர். சீர்த்திருத்தக் காரர். சீர்திருத்த உலகில் அவரது புனைபெயர் மார்க்ஸ். மேடையிலே ஏறுகிருர் என்ருலே மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்படும். அவ்வளவு சிறந்த பேச்சாளி.

ஏழை, ஈவு, இரக்கம் என்றெல்லாம் பேசுகிருரே நாமும் கொஞ்சம் கை நீட்டிப் பார்க்கலாமே என்று எத்தனையோ பேர் தங்கப்பனை யாசகம் கேட்டிருக்கிருர்கள். தன் சம்பளத்தில் அவர்களுக்கென ஒரு பகுதியைச் செலவழித்துக் கொண்டிருந்தார் தங்கப்பன். அவர்களில் ஒருவன்தான் லட்சுமி நாராயணன், அவன் கதையை தங்கப்பனல் கேட்க முடியவில்லை அவ்வளவு வேதனையடைந்தார்.

"பத்துநாள் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டிரு; எங்கேயாவது வேலை தேடிப் பார்க்கிறேன்" என்று உறுதியளித்தார். ஏழெட்டு நாட்களாகிவிட்டன. இன்னும் வேலை கிடைத்தபாடில்லை.

ஒருநாள் தங்கப்பனுக்கு அவரிடம் ஆறுமாதத்துக்கு முன் கடன் வாங்கியிருந்த ஒரு தோழரால் அனுப்பப்பட்ட, ரூபாய் முந்நூறு மணிஆர்டர் வந்தது. போன பணம் திரும்பி வந்த ஆனந்தத்தில் அதைப் பெட்டியில்கூட எடுத்து வைக்காமல் மேசை மேல் வைத்தபடியே மறந்துவிட்டுப் பள்ளிக்கூடத்திற்குச் சென்று விட்டார்

பாடம் நடந்து கொண்டிருக்கும்போது பணத்தின் நினைவு வந்தது, லட்சுமி நாராயணன்

மேல் திடீரெனச் சந்தேகமும் பிறந்தது.

பாடத்தை சீக்கிரம்முடித்து விட்டு வீட்டுக்குப் புறப்பட்டார், வரும் வழியிலே எல்லாம் நல்ல உயிர் இல்லை;

"என்னதான் நல்லவனாக இருந்தாலும் ரூபாய் முந்நூறு அல்லவா?" என்று எண்ணியவாறு நடந்தார்.

வீட்டுக்கு வந்தார் வாசலில் உட்கார்ந்திருக்கும் லட்சுமி நாராயணனைக் காணவில்லை. உள்ளே போனார்; பணத்தையும் காணவில்லை, வீட்டில்விசாரித்தார்.

—பணம் போய்விட்டது தங்கப்பவ ஒரு அலட்சியமான புன்சிரிப்புடன் மீண்டும் பள்ளிக்குத் திரும்பினார். சேலம் ரயிலடியில் பிற்பகலே வண்டியைப் பிடித்து ஈரோடு வந்து சேர்ந்தான் லட்சுமிநாராயணன் ஈரோட்டில்ரெடிமேடுகடையில் நுழைந்து வெளியே வரும்போது மைனராய் மாறி வந்தான். அவன் மனம் ஏதோ பேசிக்கொண்டிருந்தது.

'முந்நூறு ரூபாய்க்கு ஒரு வெற்றிலைபாக்குக் கடை; நானே முதலாளி''

—என்று திரும்பத் திரும்பப் பேசிற்று. கடைத்தெருவில் ஒரு பொடிப் பையன எலும்பும்தோலுமாய் நின்றுகொணடு 'ஐயா' என்றான்,

லட்சுமிநாராயணன் அவனைப் பார்த்ததுமே ஏதோ யோசனை செய்துவிட்டான்.

"டேய் பையா! என்னோடு வருகிறாடா என் வெற்றிலைப் பாக்குக் கடையில் வியாபாரம் செய்யமுடியுமா?"

—என்று அவனைக் கேட்டான். பையன் சந்தோஷமாய்த் தலையாட்டினான். அவனைத் தன்னோடு கூட்டிக்கொண்டான.

முதலாளிநடை தானாகவே வந்துவிட்டது.

10-30 மணிக்கு ஈரோட்டில் வண்டி. ஒன்றரை டிக்கட் எடுத்துக்கொண்டு இருவருமே ரயில் ஏறினார்கள். அந்தஏழைச சிறுவனுக்கு ஒரே மகிழ்ச்சி! லட்சுமிநாராயணன்பிளேயர்ஸ் சிகரட்டைப் புகைத்தவாறு கம்பீரமாக ரயிலில உட்கார்ந்திருந்தான். வண்டியும் திருச்சியை நோக்கி ஓடிக்கொண்டிருநதது.

லட்சுமிநாராயணன் வெற்றிலை பாக்குக்கடை துவக்கவிழா, குதூகலமாக நடைபெற்றது முதலாளி ஸ்தானத்தில்லட்சுமி நாராயணன். வேலைக்காரனாய் ஓடும் பிள்ளையாய் அந்த பொடிப் பயல், என்ன சுறு சுறுப்பாய் வேலை செய்கிறான் தெரியுமா? வெற்றிலை பாக்குக் கடையும் வியாபாரச் செழிப்பில் வளர்ந்தது. திருச்சியில் இந்தக் கடைககுத்தான்அபார மதிப்பு.

லட்சுமிநாராயணன் கண்ணை விழித்துப் பார்த்தான். திருச்சி ஜங்ஷனில் வண்டி நின்றது—மணி நான்கு. பக்கத்திலிருந்த பயலைப் பார்த்தான்— காணவில்லை பையைப் பார்த்தான பணமில்லை!



ஒரு பெருமூச்சு — தங்கப்பன் எதிரே வந்து நின்று சிரிப்பது போலிருந்தது.

நல்ல வேளை வெளியே செல்ல டிக்கட்டாவது இருந்தது!



இந்திராபெற்றெடுத்த "ரா" இன்றுசெய்வதென்ன? (3)

'ரா' அமைப்பு, சிறிய - கை யடக்கமான கருவிகளைப் பயன் படுத்தி வருகிறது. இந்த வகை புல ஞய்வுச் சாதனங்கள்—ஒலிபரப்பு கருவிகள் முந்தைய அரசு, பிரிட்ட னில் இருந்து 1970 ஆம் ஆண்டில் தருவித்தவையாகும்,

இந்த சிறிய கருவியை லேயே கையிலும் சட்டைப் பையி லுமாக வைத்துக் கொண்டு. நாடாளு மன்றததெருவில்—படேல் பவனத்தில் அமைக்கப்பெற்றுள்ள நிலையத்திற்கு தகவல் அனுப்பி வரு கிற பணியைச் செய்து வருகின்ருர் கள்—'ரா' அமைப்பு ஒற்றர்கள். அவர்கள் வசிக்கும் பகுதிகளில் இந் தக் கருவிகள் பேச்சு. நடமாட்டம் ஆகியவைகளைப் பதிவு செய்து கொள்ளும்.

இதுபோன்ற நுண்புலனுய்வுக் கருவிகள் போதாதென்று. கண் காணிப்பு புலனுய்வுக் கருவிபடைப் பாளர்கள் தயாரித்துள்ள புதுவகை கருவிகளை நிரம்ப வாங்கிடத் துடித் துக்கொண்டிருக்கிறது இன்றைய நடுவண் அரசு!

இந்தக் கருவிகளை அப்போதே இரஷ்யாவிலிருந்து தருவித்துப் பயன்படுத்திடச் செய்த பெருமை—திறமை 'மிசா' புகழ் இந்திரா காந்தி அம்மையாருக்கே உரித்தா னது. தருவித்து—பயன்படுத்திய பெருமையோடு நிற்கட்டும் இந் திரா காந்தி அம்மையார்; தொடர் ந்து இன்னும் நிரம்ப தருவித்துப் பயன்படுத்திடப் போகும் பெருமை திறமை எல்லாம் எங்களுக்கே உரித் தாகட்டும் என்று சொல்லாமல் சொல்லிச் செயல்படத் தொடங்கி விட்டது தேசாய் அரசு!

'ரேடியோ பில்' என்னும் ஒரு வகை மாத்திரையை 'ரா' அமைப்பு பயன்படுத்தி வருகிறது. அந்த ரேடியோ மாத்திரையை உட்கொண்டவர். தானே ஓர் ஒலி பரப்பும் நுண் - மின் ஆற்றல் நிலை யம்' ஆக இருந்ததை அறிய மாட் டாராம். அந்த வகை—முறைப்புல ஞய்விஞல்—ரேடியோ மாத்திரை கொடுப்பதிஞல் 'சிறு நீர்ப்பை' பாழ்பட்டுப் போகுமாம். அந்த நிலையைத்தான் பின் விளைவைத் தான் 1975 ஆம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்ட ஜெயப்பிரகாஷ் நாராயணனும் கண்டார். 'சிறுநீர்ப் பை' பாழ்பட்டுப் போன நிலையில் வெளியில் வந்தார்.

அந்த ரேடியோ மாத்திரை யைப் போன்றே மற்ெருரு 'வரப பிரசாதம்' இந்தியத் திருநாட்டுக்கு ஜனதா அரசிஞல் கிடைக்கப்பெற் றுள்ளது. ஒரு கண்ணுடி மூலம் தொலைவிலிருந்தபடியே. இருட்டில் கூட புற ஊதாக் கதிர்களைப் பாய்ச் சுவதன் மூலம் படம் எடுத்துவிட முடியும்! அத்தகு புத்தம்புதுக்கருவி இந்திய துணைக் கண்டத்தில் 'ரா' அமைப்பு இயங்க—'திறம்...படு—செயல்' களுக்கு உதவிட தருவிக்கப் பட்டுள்ளதாம்!

அந்த வகைக் கருவி மட்டும் தானு? இன்னும் இருக்கிறது. இந் திய நாட்டுக்கு வந்து இருக்கிறது.

அதன் பெயர்—'தொலை ஒளி விழி' அரசுக்கும—ஆள்வோர்க்கும் எதி ரான கருத்து வேறுபாடு கொண்ட வர்களை எதிர்க் கட்சிக்காரர்களை—எதிர் அணியில் இருப்பவர்களைகண் காணிக்க உடன் தொடர்ந்துசெல்ல வேண்டியதில்லை! அவர்கள் உறை யும் இடத்திலேயேஒருவருங்காணுத வாறு அமைத்து புதைத்து விடுவ ராம். தொலைவில் அமைக்கப்பட்டு இயங்கும் நிலையத்தில் இருந்த வாறே இதனை இயக்கி அவர்க ளுடைய நடமாட்டம்—உரை

ஒரு யோகியின் இரவு விவகாரம்

ரஜினீஷையும் ஒரு கல்லூ ரிப் பேராசிரியையும் நான் ஒரு நிகழ்ச்சிக்கு அழைத்திருந்தேன். "இந்தியப் பணியாளர்கள் சங்க" கட்டிடத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது, அந் தப் பேராசிரியையோடு படுக்க இரவில் ரஜினீஷ் விரும்பிஞர். ஆஞல் இதற்கு அந்த விடுதி அனுமதிக்கவில்லை இருவரும் அந்த இரவுமுழுவதும் வெளியே போய் ஒன்ருகத் 'தங்கி' இருந்து விட்டு வந்தனர்.

—மனுபாய் பட்டேல். எம்.பி.,

இரட்டை இலை 'மகாத்மியம்!'

'அப்பா...'

'மகனே!...'

'பெரிய வால்போஸ்டர் ஒட்டியிருக்காங்க — யாரோ பெயர் பெரிசா இருக்கு. தெரியலையே...'

'படிச்சுப் பார்த்தியா?'

'ஒரு எழுத்து அந்தச் சுவற்றிலே பாதி இடத்தை அடைச்சிருக்கு. அடுத்த தெருவரைக்கும் போஸ்ட நீளமாயிருக்கு. அதனுலே பார்க்க முடியலே — ஆனு ரெட்டை இலை போட்டி ருக்கு'

'அப்படியா மகனே! ஆளுங்கட்சிக்காரங்க, அத னுலே பெரிசா போட்டி ருக்காங்க'

'ஏனப்பா அப்படி?'

'தெரியாது மகனே!'

பாடல்கள் அத்துணையும் படமாக பதிவு செய்யப்பட்ட பேச்சு நாடா வர்க எடுத்துக் கொடுத்துவிடுமாம். எங்கேயோ ஒரு மூலையில்தானே இருக்கின்றேம்—ம்ப சுகின்றேம் என்று எவரும் எண்ணி வாளா விருந்திட முடியாது! அத்தனையும் படமாக பேச்சுகளை பதிவாக்கிக் கொடுத்து விடும் அந்த 'தொலை ஒளி விழி' யினைக் கொண்டுதான் இந்திரா காந்தி அம்மையார் முன்பு இந்தியத் துணைக் கட்டத்தில் தனக்கு எதிர்ப்பு அணி—எதிர்க் கட்சி அணி சார்ந்தவர்கஅ அனைவருடைய நடமாட்டம் உரையாடல்கள் அனைத்தையும் தனது கையில் வைத்துக்கொண்டுதான் முன் கூட்டிபே எல்லாவற்றையும் கண்டு கேட்டறிந்து ஆர்ப்பரித்தார் ஆட்டிப் படைத்தார்! ஆடியும் அடங்கினர்.

அன்று அம்மையார்கையாண்ட வகை முறை கண்ட கருவிகள்—ஒற்றர் படை—புலனாய்வுத் துறை—அனைத்தும் ஒரு சேர வளை—.சூழ—இயக்கும் 'ரா' அத்தனையும் இன்று பிரதமர் தேசாய் சட்டைப்பையில் கையில்! இப்போதும்தான் வருகின்றன!

முன்பு. சரண்சிங் எதிர்த்து நடத்திய போரில், தோற்று அவர் வெளியேற்றப்பட உதவி செய்தது இந்த வகை புலனாய்வு முறைகள் தானும்!

மேலும் சில வகைப் புது மருந்துகள் கொடுத்து ஒருவரின் எண்ண அலைகளையே பதிவு செய்திடும்முறையைப் பின்பற்றுகிறதாம்; வேறு சில புது வகை மருந்துகளைக் கொடுத்து 'மூளைச்சளவை' செய்யவும் தொடங்கியுள்ளதாம்! காவல்துறையில் கூட இப்படிப்பட்ட முறைகள் பயற்சி தரப்பட்டு வருகின்றனவாம்!

இப்படிப்பட்ட நுண் புலக் கருவிகளும் — படைப்புக்களும் இயைப்பியல் முறைகளும், உளவியல் உளவறி முறைகளும் தவறு செய்பவர்களிடம் குற்றம் இழைப்பவர்களிடம் பயன்படுத்தப்படுமானல் ஒரு வகையில் அது பயன் தரும்'

அதை விடுத்து. அர்சாள்வோர் தமக்கு வேண்டாதவரை தம் ஆளு(ம்) கைக் கீழ் கொண்டு வந்திடவும்—அடிமைப்படுத்திடவும்—அடங்கி ஒடுங்கிக் கிடக்கவும் பயன்படுத்தப்படுவது என்ன நியாயம்? என்று யார் கேட்கப் போகிறார்கள்...? அஞ்சிக் கிடப்பதல்லாமல் விஞ்சி எதிர்ப்பது எப்படி? என்று எல்லோரும் தமக்குள்ளேயே எண்ணிக் குமுறுகிறார்கள்!

ஊழலின் 'பரிணம' வளர்ச்சி!

கேள்வி :

அ. இ. அ. தி. மு. க பெண் எம். பி. ஒருவர் டெல்லியிலே தனக்கு ஒதுக்கப்பட்ட வீட்டை வாடகைக்கு விட்ட ஊழல் வெளியாகியிருக்கிறதே!

பதில் :

ஆமாம்! ஆமாம்! அந்த அம்மையார் மாநில மந்திரியாக இருந்தபோது தினந்தோறும் இலஞ்சம் வாங்கியவர் என்று பேரெடுத்தவர்; அப்போது அவர் செய்த ஊழல் மாநில அளவில் இருந்தது; இப்போது அகில இந்தியக் கட்சியில் சேர்ந்து, எம். பி. ஆகியிருப்பதால் அவருடைய ஊழலும் அகில இந்திய அளவில் பிரபலமடைந்திருக்கிறது. இதுவும் ஒரு 'பரிணம' வளர்ச்சி தானே!

அறிவியல் வித்தகத்தால் விளைந்த அற்புதத்தைக் குறை கூறுவதா? அல்லது ஆளு(ம்) கை-பசிப் பிணி கொண்டலையும் அரசியல் பித்தர்களை குறை கூறுவதா? முன்பு மோதிலால் நேரு வளர்த்தியார் இந்திரா காந்தியால் பெறறெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டு விட்ட 'ரா' இனி எவர்க்கும் நலம் பயக்க வரா! முன்பு இந்தியத் துணைக் கண்டத்திலிருந்த எல்லாருக்கும் அல்லலும் ஆபத்தும் வரக்காரணமாக இருந்தவர் 'இந்திரா!' இன்று, குறிப்பாக தமிழர்களுக்கும் வரவிருக்கும் அல்லலும் ஆபத்தும் மொரார்ஜி தேசாய் அவர்கள் ஆளு(ம்) கையில் இருக்கும் 'இந்தி'—'ரா'

தமிழாக்கம் :
(கவிஞர் முருகுவண்ணன்)

★

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 26–00
ஆறுமாத சந்தா ரூ. 13-00

ஆறு மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மதுவிலக்குச் சட்டம்:

இலஞ்சமும்-ஊழலும் தலைவிரித்தாடுகிறது!

தமிழ்நாடு அரசின் மதுவிலக்குக் கொள்கையால் ஊழல் தலைவிரித்தாடுகிறது. கள்ளச்சாராயம் பெரும் வியாபாரமாக நடக்கிறது, இதனால் ஆண்டொன்றுக்கு ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது,

இந்த வியாபாரத்தில்அரசியல்தொடர்பு கொண்ட பலர் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஈடுபட்டு வருகிறார்கள், காவல் துறையினர் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள்.

அமைச்சர்கள் தனிப்பட்ட முறையில் பேசும்போது, இந்தக் கொள்கையைக் கேலி செய்கிறார்கள். இரண்டு அமைச்சர்களும்

இதனால் மதுவிலக்குக் குற்றங்கள் குறைந்துவிட்டது என்று பொருளில்லை. அதிகரித்திருக்கிறது. நீதிமன்றத்தில் 1000 ரூபாய் அபராதம் கட்டுவதைவிட, 200 ரூபாய் லஞ்சத்தைக் கொடுத்து முடித்துக் கொள்ளவே விரும்புகின்றனர்,

அரசு அதிகாரிகள் கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டால் பதவி இழப்பார்கள் என்பது ஏற்கனவே இருக்கும் சட்டம். இப்போது மதுவிலக்கு குற்றம் செய்த அதிகாரிகள் பதவி இழப்பார்கள் என்று இந்தச் சட்டத்தில்கூறப்பட்டிருப்பது மிகவும் வேடிக்கையானது!

ஆங்கில நாளேடு அம்பலப்படுத்தும் உண்மைகள்

சட்டத்துறை அதிகாரி சிலரும் தங்கள் மது பெர்மிட்டைத் திருப்பித்தர மறுத்துவிட்டார்கள்,

தமிழ்நாடு அரசு மதுவிலக்கை தீவிரப்படுத்த கொண்டு வந்துள்ள புதிய சட்டம் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் ஆலோசனைபடியே உருவாக்கப்பட்டது. இந்த மசோதாவின் சில பிரிவுகளை அட்வகேட் ஜெனரல் வி. பி. ராமன் வெளிப்படையாகவே எதிர்த்தார் என்றும் நீதிமன்றங்களில் இந்தப் பிரிவுகள் அடிபட்டுப் போய்விடும் என்று கூறியதாக தெரிகிறது.

இந்தப் புதிய சட்டத்தைப் போலீசார் பொருட்படுத்தவே இல்லை, பாராமுகமாகவே இருந்து வருகின்றனர்,

இந்தச் சட்டம் வருவதற்கு முன்பு இருந்ததைவிட, இப்போது மதுவிலக்கு குற்றங்கள் நீதிமன்றங்களுக்குக் கொண்டு வரப்படுவதே இல்லை. போலீசார் மிகக் குறைந்த வழக்குகளைப் பதிவு செய்கின்றனர்.

ஒருவர் குடித்திருக்கிறார் என்பதை ரத்த பரிசோதனை மூலம்தான் தெரிந்து கொள்ள முடியும்! அதுவும் உடனே சோதனை நடத்தப்பட வேண்டும். இப்படி சோதனை நடத்தும் நிலையம் தமிழ் நாட்டிலேயே கிண்டியில் மட்டும் ஒரே இடத்தில்தான் இருக்கிறது. அங்கு வசதிகளும் மிகவும் குறைவு. எனவே சோதனைக்கு வந்த பல்லாயிரக்கணக்கான ரத்த சாம்பிள்கள்' புழுதிபடிந்து கிடக்கின்றன.

உண்மையிலே மதுவிலக்குச் சட்டத்தை மீறினவர்கள் என்பதற்காக கடந்த மூன்று மாதங்களில் இதுவரை ஒருவர் கூட தண்டிக்கப்படவில்லை.

(-டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில நாளிதழ் தலையங்கம்)

★

ஈன்ஸ்டீனின் மூளையும் பெரியாரின் இதயமும்



ஆல்பர் ஈன்ஸ்டீன் அழியாப் புகழ் ஈட்டிய அறிவியல் மேதை. பௌதிக விஞ்ஞானத்தில் புரட்சியை ஏற்படுத்தியவர் ஒளிபற்றிய அவர் ஆய்வு அவருக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது ஆனால் அவருடைய ரிலேடிவிட்டி கொள்கையோ அழியாப் புகழை ஈட்டித் தந்தது.

ஈன் டீன் உலகப் பெரும் போர்களையும் அவற்றால் ஏற்பட்ட அழிவையும்கண்டவர் எனவே விஞ்ஞான ஆராய்ச்சியுடன் அவர் தன் செயலை நிறுத்திக் கொண்டு விடவில்லை. போர்நீக்கம், உலக அமைதி சமரச சமயம் உலக அரசு போன்ற அவரின் அரசியல் சமூகச் சிந்தனைகளும் கருத்துக்களும் அவருக்கு மேலும் புகழை உண்டாக்கின

அழியாப் புகழ் பெற்ற ஆல்பர்ட் ஈன்ஸ்டீன் 1955 ஆம் ஆண்டு இறந்து போகிறார். ஏப்ரல் திங்கள் 18 ஆம் நாள் 1955 ஆம் ஆண்டு விந்தைகள் பல புரிந்த வியத்தகு அவர் மூளை எடுக்கப்படுகிறது. அவரின்உடல்தகனம்செய்யப்படுகிறது கண்டு பிடிப்புகளின் கர்த்தாவாகிய அந்த மூளை பிரின்ஸ்டன் மருத்துவ மனையின் டாக்டர் தாமஸ் எஸ். ஹார்வேரிடம் ஒப்படைக்கப் படுகிறது. பார்வைப் பொருளாகப் பாதுகாக்கவா? இல்லை இல்லை: ஆய்வுப் பொருளாகப் பயன் படுத்த! 23 ஆண்டுகளுக்கு முன் அந்த மேதையின் மூளையை ஆய்வு செய்யத் தொடங்குவதற்கு முன் டாக்டர் ஹார்வே அறிவித்தார் "இந்த மூளையின் திசுக்களில், நிணத்தில் ஈன்ஸ்டீனின் பேரறிவுக்கான ரகசியம் பற்றிய துப்புகளை நிபுணர்கள் குழு கண்டு பிடிக்கும்'' என்று.

அந்தப் புகழ் பெற்ற மூளையின் சிறு சிறு துண்டு நுணுக்குகள் இன்றைக்கும் இருக்கின்றன. அதுவும் ஆய்வுக்காகப் பயன்படுத்திய பல கறைகள் படிந்து ருக்கின்றன. விரைவில் ஆய்வறிக்கையைகுறைந்தபட்சம் பகுதி ஆய்வறிக்கையை வெளியிடமுடியும் என்று டாக்டர் ஹார்வே கூறுகிறார்.

பகுத்தறிவுப் பகலவன் சுயமரியாதைச்சுடர்தந்தைபெரியாரும் ஈன்ஸ்டீனும் சிந்தனையாளர்கள், சுய சிந்தனையாளர்கள் சுதந்திர சிந்தனையாளர்கள் சிந்தித்த துறைகள் வேறு வேறே தவிர அவர்களுக்குள்ளே வேறுபாடில்லை ஈன்ஸ்டீன் அறிவியல் சிந்தனையாளர் பெரியார்சமுதாயச்சிந்தனையாளர்.

ஈன்ஸ்டீன் இறக்கிறார் அவருடைய சிந்தனைக்கு இருப்பிடமான பிறப்பிடமான மூளை எடுக்கப்பட்டு கடந்த 23 ஆண்டுகளாக ஆய்வு செய்யப்படுகிறது. இங்கே தந்தை பெரியாரின் இதயம் என்று சொல்லப்படுகிற ஒன்று பார்வைக்கு வைக்கப்படுகிறது. அந்தப் பார்வைப் பொருள் பெரியாரின் இதயமே என்றால் கூட அதிலே எந்தப்பயனும்இல்லை. அவரின் இதயம் அனைவரின் இதயம் போன்றதே! அதிலே தனிச் சிறப்பில்லை. அவருக்கு இருக்கும் தனிச் சிறப்பெல்லாம் அவரின் சிந்தனையே.'' சிந்தனைக்குப் பிறப்பிடம் மூளை.

பாவம் அவர்கள் அப்பாவிகள்! பெரியாரின் இதயம் என்று எதையோ பார்வைப் பொருளாக வைத்திருக்கிறார்கள் என்று அலட்சியப்படுத்தவோ எள்ளி நகைத்திடவோ நான் விரும்பவில்லை. காரணம் அவர்கள் அப்பாவிகள்இல்லை. சந்தையில் எந்தப் பொருளுக்கு கிராக்கி அதிகம் என்று பார்த்து அந்தப் பொருளை விற்கும் வணிகர்களை ஒத்தவர்கள். அதுவும் பதுக்கி வைத்து விற்கும் கள்ளச் சந்தை வணிகர்கள். தமிழகத்தில் பெரியார் அண்ணா ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள்; போற்றப்படுகிறார்கள் என்பதை அறிந்து அவர்களைப் பயன்படுத்துகிறார்கள். அவ்வளவே' பெரியாரும் அண்ணாவும் அவர்களின் அரசியல்வணிகக்குறிக்களே. இல்லை என்றால் இப்படிச் செய்வார்களா?

எல். ஜி.

★

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922

தரம்நாடுவோர்தவறாமல்நாடுவது

தமிழக எண்ணெய்ப் பலகாரம்

தயாரிப்பு விற்பனை நிலையம்

92. திருப்பரங்குன்றமசாலை மதுரை 11

உரிமையாளர்

பே. தேவசகாயம்

தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முருக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி 12. அழகர்கோவில் சாலை, 72. CL வுனீஹால்ரோடு, மதுரை.

கலைஞர் பதிலளிக்கிறார்



ஜி. சுப்ரமணியம்
எம். 165. கே காலனி
நெய்வேலி – 2

கேள்வி: கழக ஆட்சியில் தமிழ்நாடு அரசின் செய்திப் படத்தில் வள்ளுவர் படம் காட்டப்பட்டது. ஆனால் எம்.ஜி ஆர் ஆட்சியில் வள்ளுவர் படம் காட்டுவதை நிறுத்திவிட்டார்களே, வள்ளுவரும் தி. மு. க. என்று நினைக்கிறார்களா?

பதில்: நான் அந்தச்செய்திப் படங்கள் எதையும் அண்மையில் பார்க்கவில்லை நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால் இந்த ஆட்சியினர் வள்ளுவர் கோட்டத்தைக்கூட இடித்து விட்டோ அல்லது மறைத்துவிட்டோ வேறொரு கோட்டம் உருவாக்கக் கூடும். அப்படி இந்தஅரசினர் செய்தால் நான் ஆச்சரியப்படமாட்டேன்.

●

ப. நாராயணன்
தேரி குடியிருப்பு
காயாமொழி
நெல்லை மாவட்டம்

கேள்வி: கலைஞர் அவர்களே. திருமண விழா. பட்டிமன்றம், பொதுக் கூட்டம், இப்படிப்பட்ட விழாக்களில் பேச்சு எப்படி இருக்கவேண்டும்?

பதில்: மணவிழாப் பேச்சு, யார் மனத்தையும் புண்படுத்தாத வகையிலும் — சமுதாய மறுமலர்ச்சியை உருவாக்குகிற தன்மையிலும் — மூடக்கொள்கைகள் விளக்கப்பட்டுப் பகுத்தறிவுக் கதிர் பரப்பப்படுகின்ற நிலையிலும் அமைந்திட வேண்டும்.

பட்டிமன்றப் பேச்சுக்களில் வாதத் திறமை ஒளிவிட வேண்டும்.

பொதுக் கூட்டங்களில் பேசும்போது கனல்கூடத் தெரிக்கலாம். ஆனால் கண்ணியம் குலையக் கூடாது.

●

கேள்வி: அ.இ.அ.தி.மு.க. வில் பதவிச் சண்டை முடிந்துவிட்டதா? இன்னும் தொடர்கிறதா?

பதில்: புதிதாக அங்கு போய்ச் சேர்ந்துள்ள சிலர் என்னை மிகவும் காரசாரமாகவும் கண்ணியக் குறைவாகவும் பேசுவதையும் எழுதுவதையும் பார்க்கும்போது இன்னும் அங்கு புதிய பதவிகளுக்கான எதிர்பார்ப்புகள் இருப்பதாகவே தோன்றுகிறது.

●

ரா. சுப்பிரமணியம்
17 உல்லாஸ் லெபர்னம்ரோடு
பம்பாய் – 7

கேள்வி: கலைஞர் அவர்களே! தங்களைப் பற்றிக் கிண்டலாகக் கருத்துப் படம் வாரந்தோறம் வெளியிடும் 'குமுதம்' இதழைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: ஒன்றும் நினைப்பதில்லை.

●

பி ஆர். தமிழ்ச்செல்வன்
சேடக் குடிக்காடு
திருச்சி மாவட்டம்

கேள்வி: இருபத்து இரண்டு வயதாகும் எனக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

பதில்: "உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்" என்ற வள்ளலார் மொழியை இந்தவயதிலிருந்தே கடைப்பிடித்திடக் கற்றுக் கொள்க!

●

எஸ். ஏ. மகேசரன்
42: கிருட்டினகிரி ரோடு
திருத்தூர், வ ஆ.

கேள்வி: கலைஞரே, என் தலைவரே, தங்களைப் பார்க்கும் பேற்றினைப் பெற்றிருக்கிறேன்; ஆனால் நேரில் பேசும் வாய்ப்பினைப் பெறவில்லை. தங்களின் உருவப் படம் (போட்டோ) ஒன்றில் கையெழுத்திட்டு எனக்கு அனுப்பி வைப்பீர்களா?

பதில்: படத்தை அனுப்பி வைத்தால் கையெழுத்திட்டு அனுப்பி வைக்கிறேன். அத்துடன் அஞ்சல்தலை வைத்து அனுப்ப மறந்துவிட வேண்டாம்.

கு. கா. சீனிராவுத்தர்
புதுமடம் (அஞ்சல்)
முகவை மாவட்டம்

கேள்வி: 'நம் நாடு' வானத்து முழு நிலவு போல் வளர்ச்சியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். நம் நாடு இதழ் வளர்ச்சிக்கு நிதி அனுப்பி வைக்கலாமா?

பதில்: நிறையச் சந்தாதாரர்களைச் சேர்த்து அனுப்பும் பணியை மேற்கொள்ளுங்கள். நிதி அனுப்புவதை விட அதுவே சிறந்த செயல்!

●

பி. செல்லத்துரை
செம்படா பாளையம்
புகளூர் ச. ஆ. அஞ்சல்

கேள்வி: தனிப்பட்டமுறையில் தங்கள்மீதும், தி.மு க. மீதும் வெறுப்புக் கொண்டவர்கள் பற்றித் தங்கள் கருத்தென்ன?

பதில்: வேறுபாடு கொண்டவர்களாக இருந்தால் உறவுக்கும் நட்புக்கும் ஊனமில்லை! வெறுப்புக் கொண்டவர்களைக் கண்டால் நாம் விலகிக் கொள்ள வேண்டியது தான் நல்லது!

●

எம். சம்பத்
வேலாயுத பாளையம்

கேள்வி: இரண்டாண்டுக் காலஜனதா ஆட்சிபற்றிய தங்களின் கணிப்புஎன்ன?

பதில்: பொறுத்திருங்கள்! இப்போதுதானே டெல்லியில் புயல் அடங்கியிருக்கிறது!

●

எஸ் கலியமூர்த்தி B. A. B. L.
வழக்கறிஞர்
4, அ. மாயூர நாதர் மேல வீதி
மாயூரம்

கேள்வி: தற்போதுள்ள இந்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் ஏதாவது வேறுபாடு உண்டா?

பதில்: மாநிலங்கள் சுயாட்சிபெற வேண்டுமென்று தேர்தல் நேரத்திலே குறிப்பிட்டுவிட்டு இப்போது அதுபற்றி மௌனம் சாதிப்பவர்கள்

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

கலைஞர் பதிலளிக்கிறார்...

(13ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அரசை நடத்துகிறார்கள்:

மாநில சுயாட்சியே கூடாது என்று முழங்கியவர்கள் இன்றும் அது குறித்துக் கவலைப்படாமல் தமிழக அரசில் வீற்றிருக்கிறார்கள். இதுதான் வேறுபாடு!

●

பி. எஸ். நாராயணன்
அம்மாபேட்டை அஞ்சல்
தஞ்சை மாவட்டம்

கேள்வி: உலகில் எல்லா விதச் சிறப்புக்களோடும் வாழ்ந்த தமிழ் மக்களிடையே இன்னும் இன உணர்வும், ஒன்றுபட்டு வாழும் நிலையும் உருவாகாமல் இருப்பதற்குத் தடைகளாக உள்ளவை எவை?

பதில்: தன்னல மனப்பான்மை அகன்றுவிடுமேயானால் நீங்கள் எதிர்பார்க்கும் உணர்வும், ஒன்றுபட்ட நிலையும் தமிழ்நாட்டு மக்களிடையே பூத்துக் குலுங்கிட நீண்ட காலமாகாது!

●

என் பாலு
c 64 IV கிராஸ்
தில்லை நகர் திருச்சி

கேள்வி: அன்புள்ள கலைஞர் அவர்களே! நீங்கள் மீண்டும் பதவிக்கு வரும்போது. 'அற்றகுளத்து அறுநீர்ப் பறவைகள்' உங்களை மீண்டும் அணுகிச் சூழமாட்டா என்பதற்கும், அண்ணா வழியில் 'மறந்தேன்; மன்னித்தேன்' என்றுகூறி அவர்களை அண்டுவதற்கு இடமளிக்க மாட்டீர்கள் என்பதற்கும் உறுதிதர முடியுமா?

பதில்: பதவியா? அதை நினைத்தாலே பயமாக இருக்கிறது. காக்கைக் கூட்டம் — காலைவாரிவிடும் கயவர் கூட்டம் — இவற்றுக்கிடையே இருந்து இப்போதுநான் தப்பி வந்திருக்கிறேன; அது பிடிக்கவில்லையா உனக்கு?

●

கோ. தமிழ் விரும்பி
செயங்கொண்டம்

கேள்வி: 'பெரியார் இதயம்' என்று யாருடைய இதயநதையோ காட்சிப் பொருளாக்கி விட்டாரே முதல்வர், அது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: அது பெரியாரின் உண்மையான இதயமாகவே இருந்தாலும் அதைக் காட்சிப் பொருளாகக் காண்பதற்கு என் மனம் தாங்காது என்று ஏற்கனவே கூறியிருக்கிறேன்.

●

எம். சுல்தான்
ஏ. 1. பாரதி நகர்
கொருக்குப் பேட்டை
சென்னை-600021

கேள்வி: 'முரசொலி'யில் கரிகாலனை இருந்து பதிலளித்தற்கும் இப்போது 'நம்நாடு' மூலம் பதிலளிப்பதற்கும் உள்ள வேறுபாடு என்ன?

பதில்: அப்போது அவசர காலச்சட்டம் இருந்தது! என் எழுத்துக்கள் "சென்சார்" செய்யப்பட்டன. அப்போது சுதந்திரமாகப் பதில் அளிக்க முடியவில்லை. இப்போது நெருக்கடி நேரமில்லை! ஆனால் எனக்குக் கிடைக்கும் நேரம் நெருக்கடியாக இருக்கிறது — எனவே விரிவாகப் பதில் அளிக்க முடியவில்லை.

●

பா. பன்னீர் செல்வம்
1 அந்தோணியார் கோவில் தெரு
மதுரை—1

கேள்வி: ஓர் உண்மையான அரசியல்வாதி எதை மறக்கக்கூடாது? எதை மறக்கலாம்?

பதில்: குடும்பத்தைக்கூட மறக்கலாம்; கொண்ட கொள்கையை மறக்கக் கூடாது!

யாருக்கு வேண்டும் இந்த உபதேசம்?

"நாட்டின் வருவாய் குறைவு. மக்கள் சிக்கனமாக இருக்க வேண்டும்!"

பசித்தவயிற்றோடுகிடக்கும் மக்களைப்பார்த்து நாட்டின் தலைவர்கள் இவ்விதம் உபதேசிக்கிறார்கள்.

ஆனால்—

குடியரசுத் தலைவர், துணைத்தலைவர் ஆகியோர் அலுவலகங்களுக்கு ஆகும் அன்றாடச் செலவோ — •

ரூ. 22,465

'இரண்டு பதவிகளுக்குச் செலவிடும் தொகையில் பட்டினி கிடக்கும் மக்களில் 10,000 பேருக்கு தினமும் ஒரு வேளை நிறைவாகச் சோறு போடலாமே''—

—பட்டினியால் வாடும் இந்தியக் குடிமகன்

இதயம் இல்லாதவரால் உயிர் இழந்த ஒரு ஏழைத்தாய்!

சென்னை மாநகராட்சிக் கல்வி அதிகாரி இருக்கிறாரே. அவர் 'தெய்வம் கொடுத்த வரத்தைத் தட்டிப் பறிக்கும் பூசாரி' வகையைச் சேர்ந்தவர். ஆணவமும், தன் கீழ் பணியாற்றும் ஊழியர்களின்சிரமங்களை உணர மறுக்கும் இரும்பு இதயமும் படைத்த எத்தனையோ 'ஜார்' காலத்து அதிகாரிகளை கோகலும், துர்கனேவும் தங்கள் கதைகளில் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் எல்லாம் நம்முடைய கல்வி அதிகாரி கனகசபையிடம் 'பிச்சை' வாங்கவேண்டும்.

ஐம்பத்தைந்து வயதான ரங்கநாயகி என்பவர் ஒரு ஏழைத்தாய். அவருடைய மகனை மாசிலாமணிக்கு இருபத்தைந்து வயதிருக்கும். திருமணமாகாத அவர் சென்னை மாநகராட்சியில் — உணவுப் பிரிவில் — ஊழியராகப் பணியாற்றி வந்தார்.

1975...ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் மாசிலாமணி மாண்டுபோனார். இருந்த ஒரே மகனை — வருவாய் ஈட்டி — பட்டினியிலிருந்து தன்னைக்காத்த மகனை இழந்துவிட்ட பரிதாபத்திற்குரிய ரங்கநாயகியின் எதிர்காலம் கேள்விக் குறியானது:

நிச்சயமற்ற எதிர்காலம் எனும் இருளில் தவிக்கும் ரங்கநாயகி போன்ற ஆயிரமாயிர ஏழைத்தாய்மார்களின் வாழ்வில் ஒளிவீச தமிழக முதல்வராக இருந்த கலைஞர் ஒரு திட்டம் தீட்டி செயல்படுத்தினார்.

"எந்த ஓர் அரசு ஊழியர் மாண்டாலும் மறுநாளே அவர் குடும்பத்திற்குப் பத்தாயிரம்ரூபாய் வழங்க வேண்டும்..." இந்த அருமையான திட்டம் இப்போது 'குரங்கு கை பூமாலை'யாகி விட்டது.

மகன் மாண்டுவிட்டதால் உதவிப் பணமான பத்தாயிரம் ரூபாய் தனக்குச் சேரவேண்டும் என்று ரங்கநாயகி, நீதிமன்றத்தில் முறையிட்டார்,

அவருடைய முறையீட்டை ஏற்றுக் கொண்ட நீதிபதி உதவிப் பணம் அவருக்குச் சேரவேண்டும் என்று மாநகராட்சிக்கு ஆணையிட்டார்.

ஆனால் —

மாநகராட்சிக் கல்வி அதிகாரியோ, நீதிபதியின் ஆணையைத் துளியும் மதிக்கவில்லை. ஓர் ஏழை நல்லபடியாக வாழ்ந்துவிடக் கூடாது என்று 'சபதம்' பூண்டிருக்கும் அதிகாரி —

ரங்கநாயகியிடம், "நீதான் ரங்கநாயகி என்று எனக்கெப்படித் தெரியும்? போய் தாசில்தாரிடம் சான்றிதழ் வாங்கிவா..." என்று சொல்லி விரட்டிவிட்டார்.

அரசு அதிகாரிகள் அவ்வளவு

பழனி சித்தார்த்தன்

எளிதில் சான்றிதழ் வழங்கிவிடுவார்களா, என்ன?

அதுவும் —

தாசில்தாரிடம் சான்றிதழ் வாங்குவதற்கு எத்தனையோசடங்குகளைமுடித்துதட்சிணைகள்வைத்தாக வேண்டுமே...

முதலில் கிராம முன்சீப்பிடம் வாங்க வேண்டும்; அவரை உடனே பார்ப்பது என்பது 'குதிரைக் கொம்பு' வீட்டிற்குப் போனால் வயலுக்குப் போயிருப்பதாகச் சொல்வார்கள்; வயலுக்குப் போனால் 'டவுனுக்குப் போயிருப்பதாகச் சொல்வார்கள். மறுபடியும் சாயங்காலம் வீட்டிற்குப் போனால் 'சினிமாவுக்கு'ப் போயிருப்பதாகச் சொல்வார்கள். எப்படியோ அவரைக் கண்டு பிடித்து அவரிடமிருந்து ஒரு சான்றிதழ் வாங்கி விடுவதாக வைத்துக் கொள்வோம்...

அடுத்து —

ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் சான்றிதழ் வாங்க வேண்டும். நல்ல மனம் படைத்தவராக இருந்தால் உடனே தந்து விடுவார்; நல்ல மனம் கொண்டவராக இருந்தால் தட்டிக் கழிப்பார்; 'இன்று போய் நாளை வா...' என்று அலைக் கழிப்பார், இல்லையென்றால் ஏதாவது எதிர்பார்ப்பார் ... அவரிடமும் வாங்கி விடுவதாக வைத்துக்கொள்வோம்.

கடைசியாக —

'மூலஸ்தானத்தில்' அமர்ந்திருக்கும் தாசில்தார் கருணை காட்ட வேண்டும். அவருடைய கருணை அவ்வளவு விரைவில் கிட்டி விடாது...

இந்தத் தொல்லைகள் சென்னையைப் பொறுத்தவரை இல்லையென்ற போதும் —

ரங்கநாயகி போன்ற ஓர் வயதான பெண்ணால் ஓர் அதிகாரியிடம் அவ்வளவு எளிதில் சான்றிதழ் வாங்கிவிட முடியுமா?

தாசில்தாரின் சான்றிதழை வாங்க —

அலைந்தார்...அலைந்தார் ... தன்னுடைய கடை மூச்சுபோகும்வரை அலைந்தார்...

பாலைவனத்தில் கானல் நீரைத் தேடி ஓடிய ஒரு மான் வயிறு வெடித்துச் செத்தது போல் —

வாழ்க்கைப் பாலைவனத்தைக் கடக்க உதவிப் பணம் பத்தாயிரம் என்ற நீரைத் தேடி அலைந்த ரங்கநாயகியும் செத்தே விட்டார்!

ரங்கநாயகிக்குச் சேரவேண்டிய பணத்தைத் தரக் கல்வி அதிகாரி தவறி விட்டதற்காக மாநகராட்சி இப்போது வருத்தம் தெரிவிக்கிறதாம், வருத்தம்...

வருத்தமும் மன்னிப்பும் போன உயிரை மீட்டுத் தருமா?

★

குண்டர்களுக்கு துணைபோகும் காவல் துறையினர்!

4-ம் பக்கத் தொடர்ச்சி]

றித் தீக்கிரையாக்கி, தீயின் கொடுமையால் கடையை சின்னாபின்னமாக்கப்பட்டு, சைக்கிள்கள், பெட்ரோமாக்ஸ் விளக்குகள், டயர். டியூப்கள் போன்ற பதினைந்தாயிரம் ரூபாய் பெறுமான முள்ள பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளன தோழர்சாமி கடுமையான தாக்குதலுக்குள்ளானார்.

பொதுக் கூட்டம் முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த 117 வது வட்டக் கிளை செயலாளர் லோகநாதனை வழிமறித்து. சைக்கிளை அடித்து உடைத்து நாசப்படுத்தினர். வெறித்தனமாகத் தாக்கப்பட்டு கண்கள் பாதிக்கப்பட்டு காவல் துறையினர் அவரை கண் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். கலைஞர் நற்பணி மன்றச் செயலாளர் சாரதி, வேதகிரி மகளிர் அணியைச் சேர்ந்த துரையம்மாள், குப்பன், துரைராசு, பட்டாணி கடை கண்ணாயிரம், நமச்சிவாயம் ஆகியோர் தாக்கப்பட்டனர்.

குத்தப்பட்ட தோழர் சீனனைப் பார்க்கவந்த மூர்த்தியை வழிமறித்து தூக்கிச் சென்று கடுமையாகத் தாக்கி, தலையை மொட்டையடித்து ஒரு பக்க மீசையை எடுத்து பிருந்தாவன காலனியிலுள்ள ஒரு தெருவில் மூர்ச்சையற்ற நிலையில் போட்டு விட்டுச் சென்றனர். பின்னர் அவரிடம் மருத்துவமனையில் மரண வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.

வேடிக்கை—பாதிக்கப் பட்டவர்கள் மீதே காவல் துறை வழக்கு பதிவு செய்கிறது! சென்னை கொந்தளிக்கிறது. கழகத் தோழர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்படும் நிலைக்கு அரசு முற்றுப் புள்ளி வைக்கவில்லை; பதட்ட நிலைக்குப் பந்தல் போட்டு விட்டார்கள். காவல் துறையினர் கண்களை மூடிக் கொண்டு அரசின் கையாட்களாகப் பணிபுரியத் தொடங்கி விட்டனர் என்று சென்னைப் பொது மக்களே பேசத் தொடங்கி விட்டனர். கழகத்தோழர்களின் குடும்பங்களுக்குத் துளியும் பாதுகாப்பில்லை.

தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் இந்த அவல நிலையினை திட்டமிட்டு ஆளுங் கட்சிக் குண்டர்கள் ஏற்படுத்தி வருகிறார்கள். எதிரியும் பார்த்துக் கண்ணீர் உருக்கக்கூடிய இந்தக் கொடிய நிகழ்ச்சிகளை அரசு கண்காணிப்பதாக இல்லை; கண்டிப்பதாகவும் தெரியவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் சட்ட உறுப்பினர், கழகச் செயல் செயல் வீரர்கள்—அனைவரின் உயிருக்கும் பாதுகாப்பில்லை கழகத் தோழர்களின் மானாபிமான உணர்ச்சியை எம். ஜி. ஆர் சோதித்துப் பார்க்கத் தொடங்கி விட்டார் அவரது கண்ணாமூச்சு விளையாட்டில் சட்டம் கேலிப் புன்னகை புரிகிறது. தமிழக அரசியலில் காட்டுமிராண்டித்தனம் கண் சிமிட்டுகிறது.

•

காட்டாற்று வெள்ளம் தடுக்கப்பட்டாக வேண்டும்: மரணப் போராட்டங்கள் தொடர் கதையாகக் கூடாது. கவனப் பிசகில் காவல் துறையும் அதிகார போதையில் ஆளுங் கட்சியும் நடைபோடுகின்றன. தி. மு. கழகத் தியாக மறவர்கள் செயல்களுக்குக் கூரேற்றி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அறிவுரை ஆளுங்கட்சியின் அராஜகங்கள் மூலம் தரப்பட்டுள்ளது. பொறுத்திருந்து பார்ப்போம் பொல்லாங்கு தேடுவோர் பகைக் கோலம் எது வென்று!

★

இலவச சினிமாவுக்கு ஏங்கும் 'இரட்டை இலைகள்'

முதல் ரசிகன் :

ஏம்பா, நம்ப வாத்தியாரு முதலமைச்சரானா விலைவாசியைக் குறப்பாருன்னு சொன்னோமே, அவரு ஆட்சிக்கு வந்து வருசம் ரெண்டு ஆகப்போவுதே, எந்த வரியைக் குறைச்சிருக்காரு? வேற ஒண்ணும் வேணாம், சினிமா டிக்கெட்டையாச்சும் குறைக்கட்புடாதா?

இரண்டவது ரசிகன் :

கொஞ்சம் பொறுத்துக்கப்பா, அவசரப்படாதே! நம்ம வாத்தியாரு பணம் வாங்காம நடிக்கப் போறாரு. அப்போ டிக்கெட் வாங்காம நாம சினிமாவுக்குப் போகலாம்...

முதல் ரசிகன் :

ஹாய்......அப்படியா......வாழ்க வாத்தியார் ஊய்...ஊய்...ஊய்...!

எழுத்துலகம்

கன்னட இலக்கிய மேதை டாக்டர் சிவராமகரந்த்

இந்திய அரசியலில் மறக்க முடியாத இந்திரா காந்தியின் சர்வாதிகார நடவடிக்கைகளை அனைத்து மாநிலங்களிலுமுள்ள இலக்கியவாதிகள், பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், சான்றோர்கள் தீவிரமாக எதிர்க்கத் தவறவில்லை. கன்னட இலக்கிய மேதை டாக்டர் சிவராம கரந்த் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து கையெழுத்திட்ட கண்டனத்தை அரசுக்கு அனுப்பினார். அத்துடன் அந்த நேரத்தில் அவருக்கு அளிக்கவிருந்த இலக்கியப்பரிசினையும் பெற மறுத்தார். டாக்டர் கரந்த் இந்தியாவில் போற்றத் தகுந்தவர்களில் ஒருவர். பெர்ட்ரண்ட்ரசல். கோகலே போன்று ஆட்சியாளர்களின் குறைகளையும் நிறைகளையும் தைரியமாக விமர்சிக்கும் ஆற்றல் படைத்தவர். ஆனால் அவரது குறைகளும் நிறைகளும் காரணத்தோடும் நேர்மையான தெளிவோடும் இருக்கும்.'

மனித வர்க்கத்தில் புதிய வழியில் தைரியமாக மாறுபட்ட வகைகளில் புதுமைகள் செய்து புகழும் பெருமையும் சிலர் அடைகிறார்கள். இந்த வகையில் பத்மபூசண் டாக்டர் சிவராம கரந்த். கர்நாடக இலக்கியத்தில் புகழ்மிக்க எழுத்தாளராக விளங்கினார். பல்வேறு துறைகளிலும் அவர் தனித்துவம் பெற்றவர் எழுத்தாளர் என்ற வகையில், கன்னட மொழியாளரிடையே உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளார். எதையும் தெரிந்து கொள்ள விரும்பும் அவரது மனம் எப்பொழுதும் அறிவுப் பசியில் தான் இருக்கும். சிந்தனையில் எல்லாக் கரைகளையும் தொடும் அலைகள் அவரது அறிவுக் கடலில் எப்பொழுதும் விழிப்புடன் இருக்கின்றன.

புதிய கருத்துக்களைப் புனைகின்ற எழுச்சிமிக்க கன்னட எழுத்தாளராகவும். புகழ்மிக்க நாவலாசிரியராகவும் நாடக அமைப்பாளராகவும் கலைகளிலும் ஓவியங்கள் வரைவதிலும் மாமேதையாகவும் முறையான இசைத் திறனாய்வாளராகவும் டாக்டர் கரந்த், அவருக்குள் ஒரு பல்கலைக் கழகமாகவே விளங்கினார். விடுதலைப் போராட்ட வீரராகவும் பத்திரிகையாளராகவும் சமூகச் சீர்திருத்தவாதியாகவும் பேச்சாளராகவும் சிந்தனையாளராகவும் இலக்கியவாதியாகவும் கல்வியாளராகவும் தன்னை உயர்ந்த இடத்தில் தக்க வைத்துக்கொண்டார்.

காட்டுமிராண்டித்தனமான கடவுள் பற்றையும் அரசியல் சமூக சீர்கேடுகளையும் நாட்டிற்கும் தனி மனிதனுக்கும் ஏற்படும் அவகேடுகளைத் தகர்த்து எறிய தனது திறனாய்வுத் திறமையையும் நகைச்சுவை கலந்த எழுத்தாற்றலையும் தனது கதைகளிலும் கட்டுரைகளிலும் — தெளிவுடனும் திறமையுடனும் பயன்படுத்தினார்.

கரந்த் ஓர் உணர்ச்சி பூர்வமான மனிதர். அவரது உணர்வுகள் தெளிவானவை. அழகானவை தாம் வாழ்வது உபயோகமான சிறந்த வாழ்வாக இருக்கவேண்டுமென்பதற்காக அவரும் அவரது கடமைகளும் ஒருமித்த அழகுடன் விளங்குகின்றன.

அரசினர் கல்லூரியில் இவர் இண்டர்மீடியட் படித்துக்கொண்டிருந்தபோதுதான் காந்தியடிகள் மங்களூருக்கு வருகை தந்தார். காந்தியடிகளின் எழுச்சிமிக்க கருத்துக்களில் மனம் ஈடுபட்டு தன் கல்வியைக் கைகழுவி விட்டு விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார். அவர் எழுத்தாளராகத் துவங்கியது 1924-ல். மங்களூரிலிருந்து வெளிவந்த 'வசந்தா' என்னும் ஏட்டின

ச. அமுதன்

ஆசிரியர் பொறுப்பேற்ற பின்புதான். இவர் முதல் கவிதைத் தொகுப்பு 'ராஷ்ட்ர கீத சுந்தாகார' என்ற பெயருடனும் முதல் நாவல் 'விசித்திரகுதா' என்ற தலைப்புடனும் வெளியாயின.

1936-ல் நடந்த இவரது திருமணம் அக்காலத்தில் நடந்த மிகப் பெரிய புரட்சியாகக் கருதப்பட்டது காரணம் இவர் கலப்புமணம் செய்து கொண்டதுதான். திருமதி லீலா காரந்தும் இசையிலும் நாடகத்திலும் முன்னணிக் கலைஞராக இருந்ததால் தமது கணவரின் நாடகங்களிலும் பல அரங்கேற உதவியாக இருந்தவர்.

கரந்த் தமது எழுத்தில், மனித இனத்தில் ஆண் பெண் இவர்களின் உணர்ச்சிகளையும் ஆசாபாசங்களையும் துலாக்கோல்போல் நிறுத்திப் பார்க்கிறார். ஒரு விஞ்ஞானியின் மதி நுட்பத்துடன் மனிதனின் குறைகளையும் நிறைகளையும் பாகுபடுத்திப் பார்க்கிறார் கற்பனையாக எழுதுவதைவிட இயல்பாகவும் சுருக்கமாகவும் சாதாரணமாகவும் — எதைப் பார்க்கிறாரோ எதை உணருகிறாரோ, அதைப் பற்றி மட்டும் எழுதுகிறார்! அவர் தனித்துவமாக, தைரியமாக இலட்சியத்துடன் தனது கருத்துக்களை வெளிப்படையாக வைக்கிறார். இது அவரது தனிச் சிறப்பு! வருங்காலத்தில் கன்னட இளம் எழுத்தாளர்களால் பின்பற்றிப் புகழ் படப்போகும் ஒரு புதிய இலக்கியப் பாரம்பரியத்தினை தனது வழியில் அமைத்துள்ளார்,

கரந்தின் முக்கியத் திறமை அவரது தனிப்பட்ட எழுத்துநடையில் தான் உள்ளது. அவரது அபரிதமான அறிவாற்றலும் கற்பனா சக்தியும் வேறு எவரும் இயலாத வகையில் எளிமையாகவும் இனிமையாகவும் உணர்ச்சி பூர்வமாகவும், இலக்கிய வடிவத்தில் வெளிப்படுகின்றன.

கர்நாடகத்தின் உயர்ந்த வானத்தையும் பசுமையான மலைச் சிகரங்களையும் கரந்தைப்போல் எவராலும் வர்ணிக்க இயலவில்லை. அவரது நாவலான 'மரலி மண்ணிகே' ஆங்கிலம், இந்தி, மலையாளம் போன்ற மொழிகளிலும் தமிழில் 'மண்ணும் மனிதரும்' என்ற தலைப்பிலும் வெளிவந்துள்ளன.

மரலிமண்ணுகே ஆளிடமேலே பெட்டத் ஜீவ, சோமனதுடி, சமீக்ஷி முதலியன இவரது மிகச் சிறந்த படைப்புகள். இவை கன்னட இலக்கிய வளர்ச்சியின் மைல் கற்களாகக் கருதப்படுகின்றன. சுமார் முப்பத்தைக்கு மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளார்.

இவரது நூலான 'பாலப்

மரணத்தின் வாயிலிலிருந்து

பேசுகிறேன்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

லாகூர் நீதிமன்ற விசாரணையின்போது நான் சொன்னேன்:

"பாகிஸ்தான் குடியரசுத் தலைவராகவும், தலைமை அமைச்சராகவும் நான் இருந்தேன் என்பதை மறந்து விடுங்கள். இந்நாட்டின் பிரதான அரசியல் கட்சியின் தலைவன் நான் என்பதையும் மறந்துவிடுங்கள். ஆனால், இந்நாட்டின் ஒரு குடிமகன்; என் மீது ஒரு கொலைக் குற்ற விசாரணை நடைபெறுகிறது. சாதாரணக்குடிமகனுக்குக் கூட — நான் என்னை ஒரு சாதாரணக் குடிமகனாகவே கருதுகிறேன் — நீதி மறுக்கப்படுவதில்லை" —

விசாரணை நீதிபதிகள். என் உயிரைப் பற்றிக்கவலைப் படவில்லை. எங்கே தங்களுடைய ஒரவஞ்சனை அம்பலமாகிவிடுமோ என்றுதான் கவலை கொண்டார்கள். கொலைக் குற்றத்திற்காக இரகசிய விசாரணை ஒன்றை நடத்திவிட்டால், பகிரங்க விசாரணை எதனையும் நடத்தவேண்டிய அவசியமில்லை; சாட்சியங்களைப் பதிவு செய்யவேண்டியதில்லை; கட்டளை அல்லது தீர்ப்பு எதனையும் எழுதவேண்டாம். இந்த முறையைக் கையாண்டால், சட்டத்தின் மாட்சி, சட்டத்தின் கொடுங்கோன்மையாக வீழ்ச்சியடைந்துவிடும். இதுகொலையையே சட்டபூர்வமானதாக ஆக்குவதாகும்.

எனினும், அந்த இரகசிய நீதிமன்றத்தில்கூட எனது எதிர்வாதத்தை எடுத்துரைக்க நான் அனுமதிக்கப்படவில்லை குற்றச்சாட்டு கூறப்பட்ட பிறகு, நீதிமன்றத்தில் முறையிடுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்ற எனது கோரிக்கைநிராகரிக்கப்பட்டுவிட்டதென கோட்லக்பாட் சிறைச்சாலையில் என்னிடம் வாய் வழியாகத் தெரிவித்தார்கள். நான் தொழில் நடத்தும் வழக்குரைஞன் அல்ல. 1978 ஜனவரி முதற்கொண்டு எனக்காக வழக்குரைஞர்கள் யாரும் வாதாடவில்லை நீண்ட நாட்கள் நோயுற்றிருந்ததால், நான் நீதி

கலைக் களஞ்சியமாகக் கருதப்படுகிறது. இவரது ஐரோப்பியப் பயண அனுபவங்களை வைத்து 'அபூர்வ பாகிமா' என்ற நூலையும் அகில இந்தியப் பயண அனுபவங்களை கொண்டு 'ஆபுவணிந்த பரமக்கை' என்ற நூலும் இவரது வாழ்க்கைப் பயணத்தை வைத்துக் கொண்டு 'குச்சுமனசின கட்டு முகலு' என்ற சுயசாத்திர நூலும் எழுதியுள்ளார்.

கன்னடமொழி வளர்ச்சிக்காக டாக்டர் கரந்த் கன்னட அகராதியும் விஞ்ஞான அறிவுடன்கூடிய 'விஞ்ஞான பிரபஞ்சா' என்ற நான்கு பாகங்கள் கொண்ட விஞ்ஞானக் கலைக் களஞ்சியத்தையும் வெளியிட்டுள்ளார். இவரது 'யக்ச கான பாயலதா' என்ற கன்னடிய கிராமியக்கலை நாடகத் திரட்டு இந்தியா முழுதும் இவருக்குப் புகழை ஏற்படுத்தியுள்ளது.

கன்னடத்துக்குக் கிராமியக் கலையை வெளி மாநிலத்தவர் கலந்து கொள்ள இவரது நூல் மிகவும் உதவி செய்கிறது. இவர் இந்தக் கலையில் சுமார் 30 ஆண்டுக்கால ஈடுபாடு கொண்டதன்றி இத்துறையில் பல ஆராய்ச்சிகளையும் மேற் கொண்டார். இதற்காகப் பழங்காலத்து ஓலைச் சுவடிகளையும் கோவில் கல் வெட்டுகளையும் வெளிக் கொணர்ந்து பல கிராமங்களுக்கு தைரியமாகச்சென்று அவர்களது பழமையான கலையை வெளியுலகுக்குக் கொணர்ந்த பெருமை இவருக்கே உரியதாகும்.

டாக்டர் கரந்தின் சமூகப் பணியும் குறிப்பிடத் தக்கது. வாழ்க்கையில் வழுக்கி விழுந்த வனிதையர்க்கும் கைம் பெண்களுக்கும் சமூகத்தின் கோரப் பிடியிலிருந்து விடுபட்டு, புனர் வாழ்வு அளிக்க மிகவும் பாடுபட்டார்.

வரது 'கன்யாபாலி' மைமனகல் சுளியலலி' போன்ற நாவல்கள் இலக்கிய வட்டாரத்தில் பெரும் புரட்சியைத் தோற்றுவித்தன.

தன்னைப்பற்றிக் கூறுகையில், "நான் முக்கியமாக ஒரு யதார்த்தவாதியாக இருக்கவே விரும்புகிறேன். பழம் பெரும் நூல்களில் சொல்லியிருப்பதாலோ அல்லது பெரிய மனிதர்கள் கூறியிருப்பதாலோ நான் ஒரு கருத்தை ஏற்றுக் கொள்வதில்லை. அது என்னை எந்த அளவு திருப்தி செய்து எந்த அளவு எனது எண்ணங்களின் வாயிலாக வெளிப்படுகிறது என்பதைப் பொறுத்தே அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வேன் என்கிறார்.

மன்றத்திற்கு வரவில்லை. அதனால் அரசுத்தரப்புச் சாட்சிகள் கூறியவற்றை நான் கேட்கவில்லை. மூன்று மாதங்கள் நடந்த பகிரங்க விசாரணையின்போது, நீதிமன்றம் என்னை அவமதித்தது; இழிவு படுத்தியது. அரசுத் தரப்பில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு முழு விளம்பரம் கிடைத்தது. பின்னர் அந்த விசாரணை. இரகசிய விசாரணையாக மாற்றப்பட்டது. பகைமை முற்றிலுமாக எனக்கு விரோதமாக திருப்பி விடப்பட்டிருந்தது. வேதனைக்குரிய அத்தனை இடையூறுகளுக்கிடையிலும். நீதிமன்றத்தில். என் உயிரைக் காப்பதற்கான தற்காப்பு உரை நிகழ்த்துவதற்கு அனுமதி கோரிய போது. அனும்தி மறுக்கப்பட்டது. ஏனென்றால், குற்றச்சாட்டுகளுக்குப் பதில்கூறும் முன்னதாக, சட்டக் குறிப்புகள் இல்லாமல் சட்டப் புத்தகங்கள் இல்லாமல், சட்டத் தீர்ப்புகள் இல்லாமல் ஒரு சாதாரணப் பாமரனைப்போல், அரசுத் தரப்புக் குற்றச்சாட்டுகளைக் கேட்பதற்கு நான் விரும்பினேன்,

மிகவும் நியாயமான இந்தக்

வீரப் பண்பாடு!

...ரிசியூர் - வல்லாளன்...

வாழ்க தமிழ் என்றே வாழ்த்திடடா — என்றும்
வளர்க தமிழ் என்றே வாழ்ந்திடடா!
வீழ்க தமிழ்ப் பகை எனமுழங்கி — இன்றே
வீரத் தமிழ்ப்படை சேர்ந்திடடா!

இன்னும் எதற்கடா தயக்கம் உனக்கு
இனியென்ன மிச்சம் இழந்திட நமக்கு?
ஏற்றிடு சூளுரை தன்மானப் போருக்கு
எழுந்திடு அழியட்டும் தமிழ்ப்பகைச் செருக்கு!
(வாழ்க தமிழ்...)

ஆண்டியாய் வந்தோரை ஆண்டையெனத் துதித்தாய்
அருந்தமிழ் மானத்தைக் குப்பையென மதித்தாய்
தந்நலப் பேயாகித் தமிழ்நெறியை மிதித்தாய்
தரங்கெடத் துணிந்தே பழிதனையும் விதைத்தாய்!
(வாழ்க தமிழ்...)

தமிழாய்ந்த தமிழறிஞன் அரசாண்ட நாடு
தமிழ்ப்பகைவன் ஆட்சியிலே இருண்டகொடுங் காடு
போதுமடா அடிமைநிலை இன்றேநீ கூடு
போர்முரசு ஒலிகேட்டு வீரப்பண் பாடு!
(வாழ்க தமிழ்...)

சிறைச்சாலைகளும், சித்திரவதைகளும் என்னை என்ன செய்யும்?

தமிழாக்கம்:
சா. க.

கோரிக்கை — முறையான நீதிக்கு வழிசெய்யும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. 'பிரதான குற்றவாளி'' எனச் சட்ட விரோதமாகக் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தாற்காபபு எதிர்வாதத்தைக் கேட்காமலே அவருக்கு ஒரு விசாரணை நீதிமன்றம் மரண தண்டனை விதிப்பது "ஒரு தலைத் தீர்ப்பு'' இல்லையென்றால், வேறெநதத் தீர்ப்பை "ஒரு தலைத் தீர்ப்பு'' என்பது? அந்த அளவுக்கு நான் குற்ற வழக்கு அநீதிக்கு பலியாக்கப்பட்டிருக்கிறேன். கொலைக்குற்றம் சாட்டப்பட்ட ஒரு எதிரிக்கு. ஒரு பாபரன் என்ற முறையில், சட்டப்படியான முன் தயாரிப்போ. சட்ட ஆலோசனையோ எதுவுமில்லாமல் இரகசிய நீதிமன்றத்தில் தன்னுடைய தற்காப்புக்காக வாதுரை செய்வதற்கு வாய்ப்பளிப்பதைத் தடுப்பதை அநியாயம், அக்கிரமம் என்று கருதாத இடம் உலகில் எங்கேனும் உண்டா? இரகசிய நீதிமன்றத்தில் என் வாதுரையைக் கேட்க வேண்டுமென நான் விடுத்த வேண்டுகோளை ஏற்க மறுத்து விட்டார்கள். என் [illegible]

அதனால் எனக்கு விளம்பரம் கிடைத்து விடுமாம்!

என் வழக்கை விசாரித்த நீதிமன்ற ஆயத்துடன் ஒத்துழைக்க நான் மறுததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் தவறாகும் என் உயிரே ஊசலாடிக் கொண்டிருக்கும்போது நான் ஒத்துழைக்க மறுப்பேனா? நான் ஒத்துழைத்தேன். சாகும்வரை என்னைத் தூக்கிலிட வேண்டுமெனத் தீர்ப்பளித்தவர்களுக்கு அவர்களுக்குரிய மரியாதையைச் செலுத்தினேன் ஆனால் விசாரணை ஆயம், நான் அதன் காலில் விழ வேண்டுமென விரும்பியது. அதற்குத்தான் நான்மறுத்துவிட்டேன்! அதனிடம் மண்டியிடவோ. தாழ்ந்துபோகவோ முடியாது என்று கூறிவிட்டேன். எந்த ஒரு முஸ்லீமும் தன்னைப் படைத்த ஆண்டவன் முன்புதான் மண்டியிடு

தார், முக்கியமாகத் தலைமை நீதிபதி எப்போதுமே என்னை அவமதித்தார்; சுடு சொற்கள் வீசினார்; இழிவாக நடத்தினார். மற்ற நீதிபதிகள் என் மீது இழிமொழிகளை வாரி இறைத்தபோதெல்லாம் தலைமை நீதிபதி அவர்களைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்; என் மீது அவர்கள் கூறிய அருவருப்பான கிண்டல் மொழிகளைக்கூட அவர் வெகுவாக ரசித்துச் சிரித்தார். அவர்களிடம் அவர் ஒரு தந்தையின் பரிவுடன் பொறுமையாக நடந்து கொண்டார். ஆங்கிலத்தை அவர்கள் புரிந்து கொள்ள இயலவில்லை என அவர் கருதியபோதெல்லாம் அதனை அவர்களுக்காக அவர் உருதுவிலோ பஞ்சாபியிலோ மொழிபெயர்த்துக் கூறினார். குத்தல் பேச்சுக்களும், முகச்சுளிப்புகளும், மறுப்புக் குரல்களும் எனக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டன. 'வாயை மூடு'. 'எழுந்திரு'. 'பைத்தியம் தெளியும்வரை இந்த ஆளை எங்கேயாவது கொண்டு செல்லுங்கள்' — இப்படிப்பட்ட மரியாதை ஆணைகள்'' எனக்காகவே அவர்கள் வாயிலிருநது பிறந்தன! இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒத்துழைப்புப்பற்றிப் பேசுவதென்றால் அதற்கு முற்றும் துறந்த மனிவருடைய பொறுமை வேண்டும்.

பெரியார் பிறவாததன் விளைவால்...

பதேபூர் சிக்ரி என்ற ஊர் ஆக்ராவிலிருந்து நாற்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

பதினாறாம் நூற்றாண்டில் மொகலாய மன்னர் அக்பரின் மனைவியான ஜோதிபாய் புதையல் ஒன்றை அங்கே ஆழக் குழி தோண்டிப் புதைத்திருப்பதாகவும் கணக்கற்ற தங்கமும் ஏராளமான வைரங்களும் அந்தப் புதையலில் இருப்பதாகவும் கிசான் சிங்சோனி என்பவன் தன் நண்பர்களிடம் 'கதை' விட்டான்.

அந்தப் புதையலை அடைய முதலில் 'தங்கச் சாவி'யைப் பெற வேண்டும் என்றான் சோனி.

ஒரு குழந்தையை 'நரபலி' யிட்டால் அந்தத் தங்கச்சாவி கிடைத்து விடுமென்று அவனே நணபர்கள்டம் கூறினான்.

சோனியின் தலைமையில் அவனுடைய நண்பர்கள் புதையலைத் தேடிப் புறப்பட்டார்கள்; நந்தலால் என்ற எட்டு வயதுச் சிறுவன் பள்ளியிலிருந்து வீட்டுச்குத் தனியே வந்து கொண்டிருந்தபோது அவர்கள் அவனைக் கடத்திச் சென்று கதறக் கதற வெட்டி 'நரபலி' கொடுத்தார்கள்.

—புதையல் அந்தக் கயவர்களுக்குக் கிடைக்கவில்லை. மாறாக, கொலை செய்த குற்றத்திற்காக கைவிலங்கிடப்பட்டு காவலரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கே ஒருபெரியார் பிறவாததன் விளைவு இத்தகைய மூடநம்பிக்கையிலுருந்து மக்கள் மீளாது, பற்பல கொடுமைகள் நடைபெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அம்பேத்காரை இருட்டடிப்புச் செய்வது ஏன்?



பல்லாயிரம் ஆண்டுகளாகவே. தங்களைத் தாங்களே உயர்த்திக் கொண்டாடும் அவர்களால் தாழ்த்தி வைக்கப்பட்டோருமாகவே இந்திடச் சமுதாயம் இடங்கி வருகிறது. இடைக்காலத்தில் அங்கங்கே தோன்றிய மேல்சாதிச் சீர்திருத்த வாதிகள், புண்ணுக்குப் புனுகு பூசுவதுபோல. சிற்சில மேம்போக்கான சீர்திருத்தங்களைச் செய்தார்கள். தெற்கே ஒரு பெரியாரும் வடக்கே ஓர் அம்பேத்காரும் தோன்றிய பிறகே, இந்த நாட்டுத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஓரளவு விடிவு ஏற்பட்டது.

இந்த விடிவை எப்படியாவது மாற்றி, மீண்டும் பழைய இருட்டையே பரப்பிட விரும்பும் மேல் சாதியார் பலப்பல தந்திரங்களைக் கையாண்டு வருகிறார்கள். அதாவது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு உதவுவதிலே புதிய அக்கறை கொண்டவர்கள் போலவும் அவர்களைச் சமமாக ஏற்றுக்கொண்டவர்கள் போலவும் மேல் சாதியார் பரவலாக நடித்து வருகிறார்கள். உண்மையில், அவர்கள் அப்படிப்பட்ட மாறுதல் எதையும் விரும்பி ஏற்கவில்லை என்பது முக்கியமான கட்டங்களில் அவர்கள் நடந்து கொள்வதிலிருந்து மிகமிகத் தெளிவாகத் தெரிகிறது...

ஏழு மாதங்களுக்கு முன்பு மராட்டிய மாநிலத்தின் மராட்வாடாப் பல்கலைக் கழகத்தில் பெயரை அம்பேத்கார் பல்கலைக் கழகம் என்று அந்த மாநில அரசு மாற்றியது: எதிர்ப்புக் குரலே இல்லாமல், ஏகமனதாகச் சட்டமன்றம் இந்த மாறுதலைச் செய்தது.

உடனேயே கிளம்பியது உயர்சாதியினரின் வெறி: காட்டுமிராண்டித்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டது; பெண்டு பிள்ளைகளை அவமானப்படுத்துவது கண்ணில் எதிர்ப்பட்டவர்களைக் கொல்லுவது, குடிசைகளுக்குத் தீ வைப்பது என்ற வழக்கமான உயர்சாதிக கொடுமை விரிந்து படர்ந்தது. ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் உயிரும் உடைமையும் இழந்தார்கள்.

மேல்சாதி உருத்திரர்ட்சப் பூனைகளின் வெறியைக் கண்டு அஞ்சிய மராட்டிய அரசு சிறிதே தயங்கியது; பெயர்

தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்படும் கொடுமைகள்!

டாக்டர்
சாலை.இளந்திரையன்
எம்.ஏ.,எம்.லிட்.,பி.எச்.டி.



குட்டுவிழாவைத் தள்ளிப் போட்டது.

வருகிற ஏப்ரல் 14 ஆம் தேதி அம்பேத்காரின் பிறந்த நாள். அந்த நாளிலாவது ஏற்கனவே அரசு முடிவு செய்தபடி அம்பேத்காரின் பெயரை அந்தப் பல்கலைக் கழகத்துக்குச் சூட்டிட வேண்டும்" என்று தாழ்த்தப்பட்ட மக்கள் கேட்கிறார்கள், உயர்சாதியினர் இதற்கு எதிராக மக்கள்குழு என்ற ஒன்றை அமைத்துக் கொண்டு மராட்வாடா என்ற பெயரை மாற்றவே கூடாது என்று கொக்கரிக்கிறார்கள்,

மக்கள். தேசியம் பாரதப் பண்பு என்னும் சொற்களின் நிழலிலே மேல் வருணத்தார் சாதி வளர்ப்புப்பணி நடத்தி வருகிறார்கள். நமது தமிழகத்தில் தேசியப்பள்ளி, தேசியக் கல்லூரி, தேசிய எழுத்தாளர் சங்கம் என்ற பெயர்களில் என்ன நடக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதானே அதே பாணியில்தான், இப்போது மராட்வாடாப் பகுதியின் "மக்கள்குழு"வும் செயற்படுகிறது.

இந்த மக்கள் குழுவின் ஒரு நயவஞ்சக யோசனையைப் பார்க்கும்போதுதான். மேல் சாதிக்காரரர்கள் தங்கள் பரம்பரைப் புத்தியை அணுவளவும் மாற்றிக் கொள்ளவில்லை என்பது வெட்டவெளிச்சமாகிறது.

"அம்பேத்கார் மிகப் பெரிய மேதை; அதிலே சந்தேகத்துக்கே இடமில்லை. அவருக்கு ஒரு நினைவுச் சின்னம் வேண்டும் என்பதிலும்எங்களுக்குக் கருத்து வேற்றுமை இல்லை. ஆனால் ஏற்கனவே மராட்வாடா என்று இருப்பதை மாற்ற வேண்டாம்; வேறுஏதாவது நினைவுச் சின்னம் எழுப்ப ஏற்பாடு செய்யுங்கள்; நாங்களும் உதவி செய்கிறோம்..."

இதுதான் (இரவோடு இரவாகப் பிள்ளையார்கள் முளைப்பதுபோல) மராட்வாடாப் பகுதியில் முளைத்துள்ள உயா சாதி 'மக்கள் குழு' தரும் தயாள யோசனை! அதாவது. மக்களுக்குப் பொதுவானதும் எல்லோரும் மதிப்பதுமான பல்கலைக் கழகத்தின் பக்கம் வராதே; (பழைய சேரிகள் போலவே) உன் தலைவனுக்கு எங்காவது ஒரு சிலை அல்லது மண்டபம் எழுப்ப நாங்களும் உதவிநிதி தருகிறோம்" என்கிறார்கள் இவர்கள்!

காலம் சென்ற தமிழ்எழுத்தாளர் விந்தன் அவர்களின் ஒரு சிறுகதையில் இப்படி ஒரு நிகழ்ச்சி வருகிறது:

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நாவிதர் குடும்பம் ஒன்று தேசியத் தலைவர் ஒருவரின் பங்களாவிலே வந்து ஒண்டுகிறது. 'சாதிகள் இல்லையடி பாப்பா!' என்று ஓங்கி முழக்கி ஓட்டு வாங்கியவர் இந்தத் தலைவர்; ஒண்டவந்த அப்பாவி நாவித

(தொடர்ச்சி 22ம் பக்கம்)



'அனைத்து இந்தியா' அனைத்திலும் தேவையா?

பல 'இந்தியாக்'கள் (பல்வேறு தனித்தன்மை உடைய மாநிலங்கள்) இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்ளும் வகையில் தான், 'அனைத்து இந்தியா" என்று சொல்லி வருகின்றோம். எந்த நிலையிலும். 'ஆல்பிரிட்டன்' — 'ஆல் ஜெர்மன்' என்று சொல்வதில்லை!

இந்த நிலையில், நாம் எல்லாவற்றிலும் அனைத்திந்திய அடிப்படையைக் கொண்டு வருவது நல்லதல்ல!

-அறிஞர் அண்ணா

●

அ.தி.மு.க. அரசைச் சாடுகிறார் கர்நாடக அமைச்சர்

அ. தி. மு. க, கொள்கை கோட்பாட்டுடன் கட்டப்பட்ட ஒரு கோட்டை அல்ல; தனிமனிதனுக்காக —எம். ஜி. ஆருக்காக நிற்கும் கட்சி அது.

கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக ஏழை பாமர மக்களுக்காக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் திணறிக் கொண்டு இருக்கிறது.

அவர்கள் தாக்கல் செய்த பட்ஜெட்டிலும் எந்த விமேரசனமும் இல்லை.

இனியும் தமிழ் நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது.

உயர்சாதியினரின் வேடம் கலைகிறது!

(21-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் இவருடைய கட்சியிலே சேர்த்து, இவருக்கு ஒட்டும், மகாத்மா காந்திக்கு ஜேயும் போட்டவரே. ஆனாலும் நாவிதர் வீட்டுப் பிள்ளைகள் தமது வீட்டுக் கூடத்தில் நிற்பதைத் தலைவரின் தேசிய உள்ளத்தால் சீரணித்துக் கொள்ள முடியவில்லை!

தமது தொண்டராகிய நாவிதனை அழைத்தார் தலைவர்; நூறு ரூபாய்ப் பணத்தை அவர் கையிலே திணித்தார். 'ஓடு, ஓடு, உடனேயே ஊருக்கு வெளியே புறம்போக்கு நிலத்தில் குடிசை கட்டிக்கொண்டு உன் குடும்பத்தை அங்கே மாற்று! பாவம், எத்தனை நேரம்தான் 'இப்படித்திண்ணையிலே ஒண்டிக் கிடப்பீர்கள்?' என்று கருணை பொழிந்தார்!

இதே பாணியில்தான், மராட்வாடாப் பெரிய சாதிக்காரர்கள், 'இடத்தைக் காலி பண்ணு, — உன் அம்பேத்கார் நினைவாலயத்துக்கு நாங்கள் உதவுகிறோம்' என்கிறார்கள். ஆக, கடந்த 30—40 ஆண்டுகளில் மேல்சாதிக்காரர்கள் போட்டுள்ள தேசிய வேடமும், சீர்திருத்த வேடமும் வெறும் பூச்சுக்களே என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. இவர்களை நம்பியோ, அனுசரித்து அரவணைத்தோ எந்தச் சிறிய சீர்திருத்தமும் செய்ய முடியாது என்பதும் உறுதியாகிவிட்டது!

"எங்கோ ஓர் இடத்தில் இப்படி நடந்துவிட்டது! மற்ற இடங்களில் மேல்சாதி புலி தன் கோடுகளை மாற்றிக்கொண்டது" என்று சொல்ல முடியவில்லை; இதுபோன்ற மேல்சாதித்தனத் தீங்குகளுக்கு அண்மைக்காலமாகக்கூட ஒரு வரலாறு இருக்கிறது.

பகுத்தறிவுத் தந்தை பெரியாருக்கு ஓர் அஞ்சல் முத்திரை வெளியிடுவதற்குள், மத்திய அரசின் அஞ்சல்துறை என்ன பாடு படுத்திவிட்டது!

யப் பெருமக்களின் வரலாறுகளைப் புத்தகமாக்கிவெளியிட்டு வரும் (புதுடில்லி, தேசியப் புத்தக நிறுவனம்) பெரியார் வாழ்க்கை வரலாறு வெளியிட மறுத்துக்கொண்டுதானே இருக்கிறது!

தமிழகத் தி.மு.க. அரசு நிறைவேற்றிய அர்ச்சகர் சட்டம் என்ன ஆயிற்று? அடிப்படைத் தொழில் தகுதி மட்டும் இருந்தால், எந்தச்சாதியாரும்கோயில்களிலே அர்ச்சகராக நியமிக்கப்படலாம் என்றுதானே அந்தச் சட்டம் சொல்லிற்று? அதை நிறைவேற்றிட விடவில்லையே உயர்சாதி ஆதிக்கம்!

உயர்சாதி உன்மத்தக் கொடுமைகளின் பட்டியல் நீளுகிறது...மத்திய அரசின் ஒலிபரப்பு விளம்பரத்துறை நமது பெருமக்களின் வாழ்க்கையை அங்கங்கே ஒலி—ஒளிச் சித்திரங்களாக நடத்திக் காட்டத் திட்டமிட்டுள்ளது இந்த வரிசையிலே, தமிழகத்தில் பெரியாரின் வாழ்க்கை முதலிடம் பெற வேண்டும் என்று தமிழக அரசு தெரிவித்ததாம். ஆனால், மத்திய அரசு அதை நிராகரித்துவிட்டு ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியின் வாழ்க்கை வரலாற்றைக் காட்டிட முடிவு செய்துள்ளதாம்.

ஒரு காலத்தில் தமிழகத்தின் தேசிய இயக்கத்துக்கே ஆணிவேரும் அடிமரமுமாக விளங்கியவராக இருந்தும், பெரியார் தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர் என்பதனால்தானே அவருக்கு இந்த அவமரியாதை? ஸ்ரீமான் சுப்பிரமணியம் உயர்ந்த சாதியிலே பிறந்தவர் என்பதைத் தவிர, நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்தவர் என்ற அளவில் பெரியாரை விட எந்த வகையிலே பெரியவர்? அவரைத் தேடிப் பிடித்து உயர்த்துவதோடு,

அப்பாவி அய்யாசாமி

செபாஸ்டியனைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்த்தோம்னு ஒரு மந்திரி சொல்றாரு. இல்லை, சேர்க்கலைன்னு இன்னொரு மந்திரி சொல்றாரு

பைத்தியம், செபாஸ்டியனுக்குப் புடிச்சிருக்கா — இல்லை, நம்ம மந்திரிகளுக்குப் புடிச்சிருக்கான்னு தெரியலையே...

அரசு இருட்டடிப்புச் செய்கிறது என்றால், — உயர்சாதியாரும் அவர்களின் அடிவருடிகளும் அவரை மனமார ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

பெரியாரும் அம்பேத்காரும் இந்த நாட்டு மக்களின் இரண்டு பெரிய தலைவர்கள். அவர்களுக்கு நினைவுச்சின்னம் படைப்பதிலே இத்தனை எதிர்ப்பு என்றால் பெரிய சாதியினரின் உண்மை உருவத்தை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

வரவு செலவு ஒரு கண்ணோட்டம்

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை ஆளுங்கட்சியின் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றுதாக இல்லை. சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் இன்றைய முதலமைச்சர் வானொலியிலும் தொலைக் காட்சியிலும் தன் கட்சி ஆட்சிக்கு வந்தால் ஏற்றத் தாழ்வற்ற ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவோம் என்று சூளுரைத்தார். தமிழக அரசின் இன்றைய நிதியமைச்சர் அறிவித்திருப்பதுபோல் மேலால் வந்த நிதிநிலை அறிக்கை. மூன்றாவது நிதிநிலை அறிக்கையாகும்.

பொருளாதாரக் கண்ணோட்டத்தோடும் கிராம மக்களின் ஏழ்மையைப் போக்கி மறு மலர்ச்சி ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையோடும் பார்த்தால். சினிமாவில் முதலமைச்சர் தொடர்பில்லாது துண்டு துண்டுக் காட்சிகளை ஒட்டி ஒரு படத்தை உருவாக்குவதுபோல் இருக்கிறது. நிதிநிலை அறிக்கை என்பது எம். ஜி, ஆர். நடித்து வெளிவந்துள்ள தேவர் படங்கள் அல்ல. இதற்கான காரணம்முதல் இடைக்கால நிதிநிலை, இரண்டாம் நிதிநிலை அறிக்கைகளில் வெளியிட்ட திட்டங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாததாகும். இந்த நிதிநிலை அறிக்கை கடந்த இரு நிதிநிலை அறிக்கைகளின் திட்டங்களைக் கைவிட்டு மற்றொரு திசைக்குச் செல்லும் அறிக்கையாக இருக்கிறது.

இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு மத்திய அரசிலும் மாநில அரசுகளிலும் பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் அத்தகைய ஐந்தாண்டு திட்டங்களின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டன. மத்திய அரசிலும் மாநில அரசுகளிலும் ஆண்டு தோறும் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கைகள் இத்திட்டங்களின் குறிக்கோள்களைப் பிரதிபலிப்பதாக இருந்தன. இந்தியா முழுமையிலும் 1967-ஆம் ஆண்டு வரை ஒரே கட்சி ஆட்சி மத்தியிலும், மாநிலங்களிலும் இருந்ததால் டெல்லி அரசு இட்ட கட்டளையை நிறைவேற்றுவதிலேயே மாநில அரசுகள் செயல்பட்டன.

1967 ஆம் ஆண்டு தமிழக விடிவெள்ளி பேரறிஞர் அண்ணாவின் நல்லாட்சி அமைந்த பின்னர் தமிழ் பொருளாதாரக் கருத்தை பிரகடனம் செய்யப்பட்டது, மாநிலங்களுக்கு திட்டங்கள் தீட்டுவதிலும். நிதிப் பெருக்கீடு செய்வதிலும், நிதி ஒதுக்கீடு செய்வதிலும் அதிக அதிகாரங்கள் வேண்டுமென தென்

வாஞ்சைநாதன்

னாட்டு பெர்னாட்ஷா பேரறிஞர் அண்ணா வலியுறுத்தினர். அண்ணாவின் அமைச்சரவை சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கைகளில் இக்கருத்துகளின் பிரதிபலிப்பைக் காணலாம்

1969 ம் ஆண்டிருந்து டாக்டர் கலைஞர் அவர்கள ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அவர் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் அவர் ஒவ்வொரு ஆண்டும் அறிவித்த புதிய திட்டங்களுக்கும், கடந்த ஆண்டின் பழைய திட்டங்களுக்கும் ஒருவித பிணைப்பும் தொடர்பும் உள்ளதைக் காண முடிகிறது. அம்முறையில் பார்த்தால் நீர்ப்பாசனம் மின் உற்பத்தி. கிராமத் தொழில் வளர்ச்சி, சிறு தொழில்கள், சமுதாயத்தில் நலிவுற்றோர், பின்தங்கிய சமூகத்தினருக்குப் பல்வேறு சலுகைகள் போன்ற பல திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். குறிப்பாகக் கல்விக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கப்பட்டன. பல நூற்றுக்கணக்கான பள்ளிகளும் கல்லூரிகளும் ஒன்பதாண்டுக் கால ஆட்சியில் தொடங்கப்பெற்று பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்பட்டது.

(அடுத்த இதழில் முடியும்)

ஈழத் தமிழர் தலைவர் வருகை!

இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்குப் பாதுகாவலராக விளங்கி அவர்களின் உரிமைக் குரலை உலகத்தின் மூலை முடுக்குகளிலும் ஓயாது ஒலித்துக் கொண்டிருப்பவரும் இலங்கை எதிர்க்கட்சித் தலைவருமான மாண்புக்குரிய அமிர்தலிங்கம் அவர்கள் முக்கிய தலைவர்களையும், பிரதமர் அவர்களையும் சந்திப்பதற்காக நம் நாட்டுக்கு வருகை தந்துள்ளார்.

15—3—79 வியாழன் மாலை 6 30 மணிக்கு விமான மூலம் சென்னை வந்த அவரை கழகத் தலைவர் கலைஞர் அவர்களும், கழக முன்னணியினரும் விமான நிலையத்தில் சிறப்பாக வரவேற்றார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால் அழகிரி அச்சகத்தில் (156, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம்-600013)

உயர்த்துவதோடு, பரிந்துகொள்ள வேண்டும்.